
Wisdom Series - Book 2



# புதுவாழ்வுக்கான அறிவு

WISDOM FOR A BETTER WORLD
THOTHANNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வுக்கான அறிவு

( Wisdom for social animation )

**மீள் உருவாக்கமும் தொகுப்பும்**

**சிட்னி மாகஸ் டயஸ்**

**தமிழில்:**

**திக்குவல்லை கமால்**

WISDOM FOR A BETTER WORLD

**தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ்**
**உல்வெவ வீதி, ஆனமடுவ**
**தொ.பே:**032 2263446
E-mail-thothanna@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pudhuvallvukkana Arivu

Sydney marcus Dias

Translated by:
Dickwelle Kamal

First Print - 2011 November
ISBN - 978-955-1848-66-8

Computer Type setting
S.S.Kumari

Illustration
Anil Susan De Silva

Printed by
Jayan Print Graphics
Galahitiyawa
Ganemulla

Published by
Thothanna Publishing House
Uswewa Road
Anamaduwa
Sri Lanka

This book is published on behalf of
-Deutsche Gesellschaft für
Internationale Zusammenarbeit (GIZ) GmbH
-Facilitating Initiatives for
Social Cohesion & Transformation (FLICT)
207/17, Dharmapala Mawatha
Colombo 07
Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வுக்கான அறிவு

( Wisdom for social animation )

**மீள் உருவாக்கமும் தொகுப்பும்**

**சிட்னி மாகஸ் டயஸ்**

**தமிழில்:**

**திக்குவல்லை கமால்**

WISDOM FOR A BETTER WORLD

தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ்
உல்வெவ வீதி, ஆனமடுவ
தொ.பே:032 2263446
E-mail-thothanna@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவாழ்வுக்கான அறிவு
சிட்னி மாகஸ் டயஸ்

தமிழில்
திக்குவல்லை கமால்

முதல் பதிப்பு - 2011 நவம்பர்

ISBN - 978-955-1848-66-8

கணனிப் பதிவும் பக்கமாக்கலும்
எஸ்.எஸ். குமாரி

அட்டைப்படம்
அனில் சூஸான் டீ சில்வா

அச்சகம்
ஜயன் பிரிண்ட்ஸ் கிராஃபிக்ஸ்
கணேமுல்லை

வெளியீடு
தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ்
உஸ்வெவ வீதி,
ஆனமடுவ.

தொ.பே: 032 2263446
ஈ.மெயில்: thothanna@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

இந்நூலுக்கு அடிப்படையாக, காலனி நாடாக இருந்து வந்ததால் சிந்தனையில் பதிந்துள்ள தவறான எண்ணங்களை அகற்றி அறிவைத் தூண்டுவதற்காக, கிராமிய.... சமய.... இலக்கியங்களினூடாகப் பெற்றுக்கொண்ட பல்வேறு கதைகள் இதில் அடங்கியுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேசிய கிராமியக் கதைகளின் இலக்கிய மரபுகளை ஆதாரமாகக் கொண்டதும், பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம், இந்து சமயக் கற்கைகளோடு சம்பந்தப்பட்ட மனதைத் தொடும் அறிவுரீதியான நற்சிந்தனையைத் தூண்டும் இக்கதைகள் நவீன கற்றல் கற்பித்தல் முறைகளுக்கு வாசலாக அமைகின்றன.

ஆசிரியர்களையும் சமுதாயச் செயற்பாட்டாளர்களையும் தனிப்பட்ட குறுகிய வட்டத்திற்கப்பால் இட்டுச்சென்று சமுதாய, மனிதநேய பார்வையில் நோக்க மானுடப் பெறுமானத்தைப் புரிந்துகொள்ள இந்த புதுவாழ்வுக்கான அறிவு பெருமளவு உதவுகிறது.

இதன் தொகுப்பாளர் சிட்னி மாகஸ் டயஸ் அவர்கள் ஆரோக்கியமான மனிதகுலத்தை கட்டியெழுப்ப கலாசார.... தேசிய நல்லுறவை நிலைநாட்ட என்றும் உழைக்கும் படைப்பாளியாவார்.

கலாநிதி டியூடர் வீரசிங்ஹ
பீடாதிபதி
சிறீபாலி பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தேசிய அபிவிருத்தி தொடர்பாக, இலங்கைச் சமூகம் ஆயிரம் கனவுகள் கண்டுகொண்டிருந்தாலும், சிறப்பான அபிவிருத்தியை நோக்கிய பயணம் மிகக் குறைந்த வேகத்துடனேயே நடைபெற்று வருகின்றது. உலகின் தொழில்நுட்ப விருத்தி எங்கள் வாழ்வை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும் எங்களது மக்களது வாழ்வின் பண்புசார் முன்னேற்றம் எந்தவகையிலும் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. தகவல் தெரிந்துகொள்வதற்கான ஊடக வசதி தாராளமயப்பட்டுள்ள யுகத்தில்கூட, சமூகத்தில் பெரும்பாலானவர்கள் அபிவிருத்தி தொடர்பான அத்தியாவசிய அறிவின் முன், புலனற்றவர்களாகவே நிற்கின்றனர்.

மேற்சொன்ன அந்தகார நிலையிலிருந்து சமுதாயத்தை கரைசேர்ப்பதற்காக பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளைப் போலவே சமூக விழிப்புணர்க் கிரியைகளும், சாதகமான வெற்றியை நோக்கிச் செல்லவில்லையென்பது மிகவும் தெளிவாக மதிப்பீடு செய்யக் கூடியதாகவுள்ளது. 'புதுவாழ்வுக்கான அறிவு' எனும் இந்த கதைத்தொகுப்பு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை புதுக்கோணத்தில் பார்க்க அவாவும் ஆசிரியர்களுக்கும், சமூக இயங்கியலாளர்களுக்கும் புத்தொளி பெற்றுத்தரும் அற்புதவளமொன்றாகும்.

புதுவாழ்வுக்கான அறிவு, பல்வேறு மதபோதகர்களின் வாழ்வனுபவங்கள், நாட்டார் இலக்கியங்கள். சமகால அனுபவங்கள் என்பவற்றைப் பின்புலமாகக் கொண்ட தொகுப்பாகும். இக்கதைகளை வரிசைப்படுத்தும்போது, மேற்சொன்ன இருசாராருக்கும் புத்தறிவூட்டுவதோடு, சமூகப் புனரமைப்பு தொடர்பாக புதிய சிந்தனைகளில் ஈடுபடக்கூடிய, சமகால இலங்கை மக்களிடையே உருவாகவேண்டிய, தேசிய ஐக்கியத்தையும் சமுதாயப் பங்கேற்பையும் அபிவிருத்தி செய்யக்கூடிய கருத்து மதிப்பீடுகளையும் தொகுத்து முன்வைப்பதே நோக்கமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இடம்பெற்றுள்ள சில கதைகள் ஆசிரியர்களுக்கும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் தமது பின்னணி பற்றி மிகவும் சாதகமான சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளத் தூண்டக்கூடிய கதைகளாகும்.

GIZ- FLICT நிறுவனத்தின் சிந்தனைக்கேற்ப உருவாக்கப்பட வேண்டிய நூல்களை தொகுப்பதற்காக என்னைத் தெரிவு செய்தமை எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகிறேன். இது புத்தகங்களாக வெளிப்படும்வரையில், செயற்தொடரை வெற்றிகரமாக்குவதற்கு உழைத்த இந்நிறுவன செயற்திட்ட அதிகாரி செல்வி ஹஷினி ஹபுதந்தரி அவர்களுக்கும், தொகுப்பு நடவடிக்கையில் உதவிய தீபிகா ஆரியபண்டார அவர்களுக்கும், சித்திரங்களை உருவாக்கிய அனில் சுஸந்த டீ சில்வா அவர்களுக்கும் இதன் உள்ளடக்கத்தை வளமாக்க உதவிய அலோசியஸ் பீரிஸ் அடிகளார், எஸ்.ஏ.சீ.எம். கராமத் அவர்கள், ரீ.பி. அபேரத்ன அவர்கள், வீ.லெரின்ஸ் பீரிஸ் அவர்கள், முரளீதரன் அவர்கள் ஆகியோரை கௌரவத்துடன் ஞாபகமூட்டுகிறேன்.

சிட்னி மாகஸ் டயஸ்
thothanna@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. கண் திறந்தது

மகாதேவ் ஒரு நிலச்சுவாந்தரின் சேவகன். அவன் தனது கடமையைப் பொறுப்புணர்வோடு செய்யவில்லை. தனது முதலாளி தன்னை அவதானித்துக் கொண்டிருக்கும் வேளையில் மிகுந்த தேவையுடனும், அக்கறையுடனும் வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவன், அவரது அவதானிப்பு இல்லாதவேளையில் வேலைகளை இழுத்தடிக்கப் பழகியிருந்தான். முதலாளி மீண்டும் வருவதைத் தெரிந்து கொண்டதும் பெரும் சத்தத்தோடு பலகைப் பொருட்களை அங்குமிங்கும் இழுத்து தூசிதட்டத் தொடங்குவான்.

நிலச்சுவாந்தர் இது சம்பந்தமாக தனது சேவகனுக்கு எச்சரித்துச் சோர்ந்து போயிருந்தார். இறுதியாக மகாதேவுக்கு நினைவில் நிற்கத்தக்க பாடமொன்று புகட்ட வேண்டுமென்று முதலாளி யோசித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளியின் வீட்டில் மிகப் புராதன காலப் பொருளான பெட்டி யொன்று காணப்பட்டது. நீண்டகாலமாக மகாதேவ் அதைத் தொட்டதே கிடையாது. கட்டிலடியில் தள்ளிவிட்டிருந்த அந்தப் பெட்டியை வெளியே இழுத்துத் திறந்து பார்த்த முதலாளிக்கு அதில் சிறிய பணப்பையொன்று இருப்பது தெரிந்தது.

நிலாச்சுவாந்தர் கடித உறையொன்றெடுத்து அதில் ஐநூறு ரூபா இட்டார். அதன் பின்பக்கமாக 'மகாதேவ் இப்பணம் உனக்குத்தான். இதனைக் கொண்டு உனக்குத் தேவையானதை வாங்கிகொள்' என்று எழுதினார்.

பணம் இட்ட உறையை அந்தப் பணப்பையில் வைத்து, மீண்டும் அதனைப் பெட்டியில் வைத்துவிட்டார். அப்பெட்டியை நன்கு பரிசுத்தமாக்கி வைக்குமாறு சேவகனுக்குச் சொல்லிவிட்டு ஒரு பயணம் செல்ல வெளிப்பட்டார்.

பயணம் சென்று திரும்பிய முதலாளி, "மகாதேவ் எனது பெட்டியை துப்பரவு செய்தாயா?" என்று கேட்டார்.

"ஆம் ஐயா இதோ இருக்கிறது" என்ற மகாதேவ் அப்பெட்டியை மேசைமீது கொண்டுவந்து வைத்தான்.

"பெட்டியின் உள்ளேயும் நன்கு துடைத்திருப்பாயென்று நம்புறன்"

"ஆம் ஐயா... நான் எல்லாப்பக்கமாகவும் நன்கு துடைத்தேன்" மிகவும் அடக்கமான முறையில் சேவகன் சொன்னான்.

பெட்டியைத் திறந்து பார்த்த முதலாளிக்கு உள்ளே சுத்திகரிக்கப்படா தது தெரிந்தது. மகாதேவ் வாசிப்பதற்காக வைத்த பணமிட்ட உறைகூட அதேநிலையில் காணப்பட்டது.

"இங்க பார்.... நீ சரியான முறையில் உள்ளே துடைத்திருந்திருந்தால் உனக்கு பணம்வைத்துள்ள உறை கிடைத்திருக்க வேண்டுமே. உனக்குத்தான் அந்தப் பணத்தை வைத்தேன்" என்றார்.

தனது ஒழுங்குமுறையற்ற வேலைகளையிட்டு கோபம் கொண்டிருந்த முதலாளி, தனக்கு கடும் தண்டனை வழங்கியிருப்பது மகாதேவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. எந்தப் பதிலும் சொல்ல இயலாத நிலையில் அவன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டான்.

தன்வசம் இல்லாத பொருட்களை விலைகொடுத்து வாங்கிக் கொள்ளப் போதுமான பணத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க பெறுமதி அற்றுப் போனது மகாதேவுக்குப் புரிந்தது. அதன் பின்னர் எஜமான் எந்த வேலையைத் தந்தாலும் அதனைப் பொறுப்புடன் தேடிப் பார்த்துச் செய்ய மகாதேவ் முயற்சித்தான்.

***விவரணம்***

1. முதலாளி மகாதேவின் அலட்சியத்தை இல்லாததாக்குவதற்காகப் பயன்படுத்திய உபாயத்தை, புதிய செயற்பாடாக பிரயோகிக்கத்தக்க சந்தர்ப்பங்களை உன்னால் ஞாபகப்படுத்த இயலுமா?

2. மகாதேவ் தனது பிழையான செயற்பாடுகளை புரிந்துகொள்வதற்காக முதலாளி பிரயோகித்த இத்தகைய வேறு சந்தர்ப்பங்களை உம்மால் நினைவூட்ட முடியுமா?

3. சமூக புத்துணர்வூட்டலின்போதும் கற்பித்தல் செயற்பாட்டின் போதும் இந்த உபாயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வேறு சந்தர்ப்பங்களை நினைவூட்ட முடியுமா?

***வலியுறுத்தல்***

✪ கடுமையற்ற..... மனதை மகிழ்வூட்டக்கூடிய.... உண்மையான சொற்களை, பிறரை கோபமூட்டாத சொற்களை, யார் பிரயோகிக்கிறாரோ அவரைப் புனிதமானவர் என்பேன்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. குழப்பமான சித்திரம்

தவணைப் பரீட்சை முடிவுற்று விடைத்தாள் திருத்தும் காலம் அது. பெரும்பாலான ஆசிரியர்கள் தத்தமது வகுப்பறைகளில் அமர்ந்து திருத்தம் செய்தனர். ஆசிரியர் ஓய்வறையிலும்கூட சில ஆசிரியர்கள் விடைப் பத்திரம் திருத்திக் கொண்டிருந்தனர். சில பிள்ளைகள் எழுதுகின்ற சிரிப்பூட்டும் விடைகளை எல்லோரும் கேட்கக்கூடியதாக வாசித்து, தமது ஒரேவித போக்கை திசைதிருப்புவதற்குக்கூட அவர்கள் பின்னிற்பதில்லை.

சித்திரம் கற்பிக்கும் ஆசிரியை சித்திரங்களைப் பார்த்துப் புள்ளியிட்டுக் கொண்டிருந்தார். சித்திரை விடைப்பத்திரக் குவியலுக்குள்ளிருந்து ஒரு மாணவன் வரைந்திருந்த வித்தியாசமானதொரு சித்திரம் வெளிப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த முழுச் சித்திரமும் கடும் சிவப்பு நிறத்தாலேயே தீட்டப்பட்டிருந்தது. அச்சித்திரத்தைக் கண்ட ஆசிரியை திகைப்படைந்தார்.

"இங்க பாருங்க இந்தப் பையன் வரைந்துள்ள சித்திரத்தை" ஆசிரியை அந்தச் சித்திரத்தை அடுத்தவர்களுக்குக் காட்டினார்.

"அப்பாடா பூசியிருக்கிற நிறம். இறைச்சிக்கடை மாதிரி. யார் இதை வரைந்த பிள்ளை?" கணித ஆசிரியர் கேள்வி எழுப்பினார்.

"அந்த நிறத்திற்கும் பிள்ளையின் உணர்வுக்குமிடையே பெரிய தொடர்புண்டு. அந்தப் பிள்ளைபற்றி கொஞ்சம் கவனமாக இருக்கவேண்டி வரும். கேஸ் ஸ்டடியொன்று செய்தால் நல்லது"

"அந்தப் பிள்ளை ஏதாவது வித்தியாசமான மனநிலையிலிருக்கும் பிள்ளை. நிச்சயமாக குழப்பகரச் சூழலில் வளரும் வன்செயல் அனுபவங்களைப் பெறும் பிள்ளையாக இருக்கவேணும்"

"உங்களுக்கு நல்லது. இவனை உங்கள் எம் எட்டுக்கு ஆய்வு செய்யத் தெரிந்தெடுங்க"

"அதுதானே எனக்கு அந்தப் பிள்ளய பார்க்க ஆசையாயிருக்கு. வரச்சொல்ல முடியாதா?"

"பையன் பார்த்த பார்வைக்கு திக்பிரமை பிடித்தவன் போலிருப்பான். சரியான முரட்டுத்தனம்" என்ற சித்திர ஆசிரியை பிள்ளை ஒருவனை அழைத்து, செய்தி அனுப்பி குறித்த சிறுவனை அழைத்தார்.

கீழே பார்த்தபடி குறிப்பிட்ட பிள்ளை ஆசிரியையின் முன்னால் வந்து நின்றான்.

"ஆ தம்பி நீதானே இந்தச் சித்திரம் வரைந்தது?"

சிறுவன் தலையைத் தாழ்த்தினான்.

"தம்பி எங்கிருந்து ஸ்கூல் வாறீங்க?"

"ஆறாம் கொலனியிலிருந்து" சிறுவன் கீழே பார்த்தபடி பதில் கூறினான்.

சிறுவன் பதிலால் ஆசிரியர்கள் முகத்தை முகம் பார்த்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா என்ன செய்றார்?"

"அப்பா மார்கட்டில் இறைச்சி விக்கிறார்"

ஆசிரியர்கள் மீண்டும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து சமிக்ஞை செய்துகொண்டனர்.

பிள்ளையின் குடும்ப பின்னணி பற்றி நிறையக் கேட்டறிந்த பின் அவனை சித்திர ஆசிரியை தனதருகே அழைத்துக் கொண்டார்.

"ஏன் நீங்கள் முழுச் சித்திரத்திற்கும் சிவப்பு பூசினீங்கள்?" என்று கேட்டார்.

சிறுவன் சிறிது நேரம் பதிலின்றி நின்றான்.

"சிவப்பு பூசினால் அழகாக இருக்குமென்று நினைத்தியா?" சித்திரா ஆசிரியை பதிலை வாய்க்குக் கொடுப்பது போன்று கேட்டார். இருந்து அதற்குப் பதிலாகச் சிறுவன் நடுநடுங்கியபடி இவ்வாறு சொன்னான்.

"இல்லை மிஸ் என்னிடம் சிவப்புநிற பென்சில் மட்டுமே இருந்தது"

## விவரணம்

1. ஆசிரியர்கள் பிள்ளை பற்றி ஏற்படுத்திக் கொண்ட கருதுகோள்கள் விஞ்ஞானபூர்வமானதா?
2. இப்படியான பிரச்சினைகளை சரியாக விளங்கிக் கொள்ளாததால் பிள்ளைகளின் வாழ்வில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் என்ன?
3. இக்கதை ஆசிரியர்களுக்கும் சமூக விழிப்புணர்வூட்டுபவர்களுக்கும் விடுக்கும் சவால் என்ன?

## வலியுறுத்தல்

✪ இறைவன் விரும்பும் இலட்சணங்கள் இரண்டை உங்களுக்குத் தந்துள்ளான். அவை நற்குணமும் நற்சிந்தனையுமாகும்.

அல்ஹதீஸ்

முகம்மது நபிகள் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. ஏழைகளைத் தேடிச் செல்லல்

நகரத்தில் வளமான வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்த குடும்பமொன்றில், மகனுக்கு கேட்பதையெல்லாம் வழங்கிக் கொண்டிருந்த தகப்பனுக்கு, தனது மகன் கவலை கஷ்டங்கள் தெரியாமல் வளர்வதுபற்றி உணரத் தொடங்கினார். தனது பிள்ளையை ஏழைகள் வாழும் இடமொன்றுக்க அழைத்துச் சென்று, வசதியீனங்களுக்கு மத்தியில் வாழும் நிலையைத் தெரியவைப்பதற்கு தகப்பன் யோசித்தார். அதன்படி தனது மகனைப் பின்தங்கிய ஏழ்மைமிகுந்த ஓர் ஊருக்கு அழைத்துச் சென்றார்.

இரண்டு நாட்களாக ஊர்மக்களோடு காலத்தைக் கடத்திய அப்பாவும் மகனும் திரும்பவும் வீட்டுக்கு வரப் புறப்பட்டனர். வரும் வழியில் ஊர் மக்கள் கடத்தும் வாழ்க்கையையும் தங்களது வாழ்வுக்குமிடையிலான வேறுபாடு பற்றி தகப்பன் தனது மகனிடம் விசாரித்தார்.

"எங்களைவிட அவர்களது வாழ்க்கை மிகவும் வித்தியாசமானதுதான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா. எங்களது முழு இடமும் பதினைந்து பேர்சஸ்தான். அவர்களது வீட்டுத் தோட்டம் மிகவும் விசாலமானது. நாங்கள் பாதுகாப்புக்காக மதில் கட்டி பெரிய கேற் அமைத்துள்ளோம். அவர்களது பாதுகாப்புக்கு அக்கம் பக்க மக்களே உள்ளனர். நாங்கள் சாப்பிட மரக்கறி, பழம், அரிசி எல்லாம் கடையால் கொண்டுவர வேண்டும். ஆனால் அவர்களின் தோட்டங்களில் மரக்கறி, பழவகைகள் தானாகவே செழித்து வளர்ந்திருக்கு. எங்களுக்கு குடிப்பதற்கு குறிப்பதற்கெல்லாம் குழாய் நீர்தான். ஆனால் அவர்களுக்கு குளம் நிறைய நீர் நிரம்பி வழிந்து கொண்டிருக்கு. அதிலே இறங்கிக் குளிக்கிறார்கள். குடிநீர் நிறைந்த கிணறொன்றும் உண்டு. எங்களுக்கு நீந்தத் தேவைப்பட்டால் பணம் செலுத்தி நீச்சல் தடாகத்திற்குப் போகவேண்டும். அவர்களுக்கோ அற்புதமான நீரோடை அமைந்துள்ளது. நாங்கள் வீட்டினுள் சென்றால் இரவைக்கு வெளிச்சம் போட வேண்டும். ஆனால் அவர்கள் முற்றத்துக்கு வந்து நிலவொளியில் மிகுந்த மகிழ்ச்சியோடு பொழுதைக் கழிக்கின்றனர். அந்தவகையில் பார்க்கும்போது நாங்கள் எந்தளவு ஏழைகள் பாருங்கள், அப்பா"

மகனின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த தகப்பன் மகனை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

## *விவரணம்*

1. தகப்பன் விளங்கிக் கொண்டதற்கும் மகன் விளங்கிக் கொண்டதற்கும் இடையிலான வேறுபாட்டை நீர் எவ்வாறு அறிந்துகொண்டீர்?
2. மகன் வந்துள்ள முடிவு, சரியானதோ பிழையானதோ என்பது பற்றி உமது வாதமென்ன?
3. தந்தை பிரயோகித்த செயல்முறையை ஜனநாயகபூர்வமான கற்றல் செயலாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உமக்குக் கிட்டுமா?

## *வலியுறுத்தல்*

1. உலகில் எறும்புபோல் வாழ்க. உலகம் உண்மையும் பொய்யும் ஒன்று கலந்துள்ளது. சீனியும், மண்ணும்போல. நீர் எறும்புபோல் சீனியை வேறுபடுத்தத் தெரிந்துகொள்.

இந்துமதநூல்
சுவாமி இராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. கடவுளைக் காணல்


ஒரு சின்னஞ் சிறுவன் சித்திரமொன்று வரைந்துகொண்டிருந்தான். அவனருகே சென்ற வயதாளி ஒருவர் சிறுவன் வரையும் சித்திரத்தை சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

"தம்பி நீங்கள் வரையும் சித்திரம் என்ன?" என்று கேட்டார்.

"நான் கடவுளை வரைகிறேன்"- சிறுவன் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் பதில் கூறினான்.

"நாங்களே இன்னும் கடவுளைக் காணவில்லை. நீங்கள் எப்படி கடவுளை வரைய முடியும்?" வயதாளி விசாரிக்க முனைந்தார்.

"ம்..... அப்படியென்றால் நான் வரைந்த பின் உங்களால் பார்த்துக் கொள்ள முடியும்" சிறுவன் சொன்னான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *விவரணம்*

1. இக்கதையில் சிறுவன் சொன்னதினூடாக அவனது எத்திறமை வெளிப்படுகின்றது?

2. மிகவும் சுதந்திரமான கற்றல் சூழலொன்றை உருவாக்கிக் கொடுத்தல், பிள்ளைகளின் வாழ்க்கையில் சாதகமான பாதிப்பைக் கொண்டுவருமென்ற கருத்தோடு நீர் ஒன்றுபடுகிறீரா?

3. சிறுவர்களின் கற்பனை உலகை நிர்மாணித்து மெருகூட்ட பிரயோகிக்ககூடிய கற்பித்தல் முறைகள் சிலவற்றை உம்மால் ஞாபகமூட்டலாமா?

## *வலியுறுத்தல்*

✪ சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்க வேண்டாம். ஏனென்றால் இறைவனின் ராஜ்ஜியம் இவ்வாறானதுதான். எவர் இறைவனின் ராஜ்ஜியம் சிறுவர்களுடையதென்பதை ஏற்கவில்லையோ, அவர் ஒருநாளும் அங்கு பிரவேசிக்கமாட்டார்.

புனித பைபிள்
யேசுநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. மூன்று சோம்பேறிப் பிள்ளைகள்

ஒரு முந்திரிகைத் தோட்டத்து சொந்தக்காரனுக்கு மூன்று பிள்ளைகளிருந்தனர். மூவரும் சோம்பலுடனும் விளையாட்டுத்தனமாகவும் காலத்தைக் கடத்தினார்களே தவிர, பலன்தரத் தக்கதாக எதுவும் செய்வதில் அக்கறை காட்டவில்லை. முந்திரிகைத் தோட்டக்காரனின் பலவீனத்தாலும் தனது பிள்ளைகளின் உதவி ஒத்தாசை கிட்டாததாலும் தோட்ட வருமானம் மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. நிலம் கூட இறுகிப் போய்ப் பற்றைக்காடு வேறு நிறைந்து போயிருந்தது. தனது பிள்ளைகள் மூவரும் விளையாட்டுப் புத்தியாலும் சோம்பலினாலும் காலம் கடத்தப் பழகியிருந்ததால் தனது மரணத்தின் பின்பு அவர்கள் கவலைக்குள்ளாவார்களென்று அவர் மிகவும் பயந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயில் விழுந்த நிலையில் காலம் கடத்திய முந்திரிகைத் தோட்டக்காரன், தனது பிள்ளைகள் மூவரதும் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு பல்வேறு உபாயங்களை யோசித்தவர் அவர்களை அருகே அழைத்தார்.

"எனது தகப்பனார் இத்தோட்டத்தில் பெறுமதியான புதையலொன்றைப் புதைத்து வைத்துள்ளார். மூவராலும் முடியுமென்றால் அதனைத் தேடிக் கொள்ளுங்கள். அப்போது உங்கள் வாழ்நாள் முழுவதும் சகல வசதிகளோடும் வாழலாம்" என்றார்.

தகப்பனாரின் பேச்சினால் உற்சாகமடைந்த மூவரும் மண்வெட்டி கொண்டு முந்திரிகைச் செடிகளைச் சுற்றி மண்ணைக் கொத்தி, மிருதுவாக்கி மரங்களுக்கிடையே புதையல் தேடிக் களைத்தனர். முழுத் தோட்டத்தையும் கொத்தித் துப்புரவு செய்தபோதும், அவர்களுக்கு புதையலுக்கான எந்த அறிகுறியும் கிட்டவில்லை. அதற்கிடையில் தகப்பனாரும் காலம் சென்றுவிட்டார்.

தங்களுக்குத் தகப்பனார் பொய் சொல்லிவிட்டாரென்று இறந்துபோனவரின் மீது பிள்ளைகள் மூவரும் கோபப்பட்டனர். சில நாட்களில் மலைகாலம் ஆரம்பித்தது. நிலத்தில் மழைநீர் விழுந்ததனால் இவ்வளவு நாளும் காய்ந்து போயிருந்த முந்திரிகைச் செடிகள் வளர்ந்து கொழுந்து பரப்பி செழிக்க ஆரம்பித்தன. காலப்போக்கில் முந்திரிகை குலைகுலையாகத் தொங்க ஆரம்பித்தது.

நீண்ட காலத்திற்குப் பிற்பாடு அந்த போகத்தில் முந்திரிகைத் தோட்டத்தில் அதிக வருமானம் கிட்டியது. அந்த அறுவடையை பெரும் முதலுக்கு விற்றுக்கொள்ள முடிந்தது. அறுவடை மூலம் நிறையப் பணம் கிட்டியபோது அவர்களுக்கு அப்பா சொன்ன புதையல் ஞாபகம் வந்தது. அவர் சொன்ன புதையல் இதுவாகத்தான் இருக்க வேண்டுமென்று அவர்கள் யோசிக்கத் தலைப்பட்டனர். அப்போது தமது தகப்பனைப் பற்றி பெருமதிப்பு அவர்களுக்கேற்பட்டது. அதன் பின்னர் மூவரும் தோட்டத்தைச் செழிப்பாக வியர்வை சிந்தி உழைக்க ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *விவரணம்*

1. தமது பிள்ளைகள் மூவரதும் அசிரத்தையை நீக்குவதற்காக தந்தை பிரயோகித்த உபாயத்தை, நீர் அறிந்த கற்பித்தல் முறைகளில் இணைத்துக் கொள்வது எவ்வாறு?

2. தந்தை பயன்படுத்திய கற்பித்தல் முறையைப் பயன்படுத்தத்தக்க சில சந்தர்ப்பங்களை நினைவுபடுத்துக.

3. மானுட அபிவிருத்தி செயற்பாடுகளின்போது இவ்வாறான கற்பித்தல் முறை, பாரம்பரிய முறையை விட பயனுள்ளதாக எவ்வாறு அமைகிறது?

### *வலியுறுத்தல்*

✪ மனிதர்களைப் பாவத்தின்பால் இட்டுச் செல்லும் நிலைமைகள் உருவாவது இயல்பானது. எனினும் யாராவது ஒருவர் காரணமாக அவ்வாறு ஏற்படுமாயின் அவருடைய நிலை விபரீதமானதாகும். இந்த சின்னமனிதனால் இன்னொருவர் பாவத்திற்குள்ளாகுவாராயின், அவனது கழுத்தில் அம்மியைக் கட்டிக் கடலில் ஆழ்த்திவிடுவது அதைவிட நல்லது. கவனமாக இருங்கள். உங்கள் சகோதரன் பாவம் செய்தால், அவனை எச்சரியுங்கள். அவன் மனம் வருந்துவானாயின் அவனை மன்னியுங்கள். தினமும் நான்கு தடவை உங்களுக்கெதிராகப் பாவம் செய்துவிட்டு, நான்கு தடவை உங்கள் பக்கம் திரும்பி "நான் மனம் வருந்துகிறேன்" என்றால் அவனை மன்னியுங்கள்.

புனித பைபிள்
யேசுநாதர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. பொற்காசு முதலீடு

ஓர் உயர்குலச் செல்வந்தன் நீண்டகால வெளிநாட்டுச் சுற்றுலா வொன்றுக்கு ஏற்பாடு செய்தார். ஊரிலிருந்து வெளியேறுவதற்கு முன் பாக தனது சேவகர்கள் மூவரை அழைத்து ஒவ்வொருவருக்கும் தலா ஒவ்வொரு தங்கக்காசு கொடுத்து அதனைப் பெருக்கிக் கொள்ளுமாறு சொன்னார்.

பின்னர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட செல்வந்தர் நீண்டகாலத்தின் பின்பு மீண்டும் வந்துசேர்ந்தார். அடுத்த நாளொன்றில் சேவகர்கள் மூவரையும் அழைத்த செல்வந்தர் தான்கொடுத்த தங்கக்காசு பற்றி வினவினார்.

முதலாமவர் பதிலளிக்கும்போது "நீங்கள் தந்த காசை நான் முதலீடு செய்து ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தேன். இப்பொழுது அது பத்துமடங்காக அதிகரித்துள்ளது" என்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சிக்குள்ளான தனவந்தர் "சொற்ப பணத்தின்மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டு பெருமளவு சொந்தமாக்கிக் கொண்டுள்ளாய். அதனால் நீ ஐந்து நகரங்களுக்கு அதிபதியாக இருப்பதற்கு தகுதி பெற்றுள்ளாய்" என்றார்.

பின்னர் இரண்டாவது சேவகனின் முன்னேற்றத்தை விசாரித்தார்.

அவன் பேசும்போது, "நான் அந்தப் பொற்காசை மூலதனமாக்கி அதனை ஐந்து மடங்காக அதிகரித்துள்ளேன்" என்றான்.

அதைக் கேட்டு பெருமகிழ்ச்சிக்குள்ளான செல்வந்தர் "நீயும் ஐந்து நகரங்களைத் தெரிவு செய்து அதிபதியாகலாம்" என்றார்.

இறுதியாக மூன்றாவது சேவகன் தனது எஜமான் முன்வந்து, "ஐயா நீங்கள் தந்த பொற்காசை சேலைத்துண்டொன்றில் சுற்றிப் பாதுகாப்பாக வைத்தேன். நீங்கள் கொடுக்காததை எடுக்கின்ற விதைக்காததை அறுவடை செய்கின்ற கடும்மனமுள்ளவரென்பதால், அந்தப் பயத்தில் அப்படிச் செய்தேன்" என்றான்.

"சோம்பலும் கபடமும் நிறைந்த உனது வார்த்தைகள் மூலம் உன்னை மதிப்பீடு செய்கிறேன். நான் கொடுக்காததை எடுக்கும் விதைக்காததை அறுவடைசெய்யும் கடும் நெஞ்சுடையவன் என்று நீ தெரிந்து வைத்துள்ளாய். அப்படியென்றால் நான் வரும்போது வட்டியுடன் கொடுக்கக்கூடியதாய் ஏன் வங்கியில் வைப்புச் செய்யவில்லை" என்று கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு சேவகனை வைத செல்வந்தர் தனது ஏனைய சேவகர்களை அழைத்து, இவனுக்குக் கொடுத்த பொற்காசை எடுத்துப் பத்துக் காசு வைத்துள்ளவனுக்குக் கொடுக்குமாறு பணித்தார்.

அப்போது சேவகர்கள் அவனை நெருங்கி "ஐயா அவனிடம் பத்துக்காசு இருக்கிறதல்லவா" என்றனர்.

"இருப்பவர்களுக்கு மேலதிகமாகக் கெடுக்கப்படும். இல்லாதவர்களிடம் ஏதோ இருப்பது எடுக்கப்படும். எந்தப் பயனுமில்லாத இந்த மனிதனை அந்தக்காரத்திற்குள் தள்ளிவிடுங்கள். அங்கு அழுகையும் கைசேதமும் மட்டுமே அவனுக்குக் கிட்டும்" என்று தனவந்தர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

யேசுநாதரினால் உபதேசிக்கப்பட்ட இக்கதை தொடர்பாக முன்வைக்கப்படும் சம்பிரதாயபூர்வமான விவரணத்தை சில தர்ம அறிஞர்கள் சவாலுக்கு உட்படுத்தியுள்ளனர். தனது சுய திறமையை வளர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டுமென்பது சம்பிரதாயபூர்வமான விளக்கமாயினும் திரு அலோசியஸ் பீரிஸ் அடிகளார், இதனூடாக யேசுநாதர், செல்வந்தர்கள் வறியவர்களைச் சுரண்டுவதை சவாலுக்குள்ளாக்கியிருப்பதாகத் தெரிவிக்கிறார்.

தனக்குக் கிடைத்த பொற்காசை சுற்றிவைப்பதன் மூலம் சுரண்டலுக்கெதிராக சவால் விடுவதென்பதே அடிகளாரின் தர்க்கமாகும். யேசுநாதரின் ஏனைய அறிவூட்டும் கதைகளைப் போலவே இக்கதையிலும்கூட எந்த இடத்திலும் உயர்குலச் செல்வந்தரை கடவுளுக்கு சமதையாக்க முயற்சிக்கவில்லை. அதன்படி இந்தப் படிப்பினையூட்டும் கதையினூடாக எதிர்வினையான சிந்தனையையே முன்வைத்துள்ளார் என்பதே அலோசியஸ் பீரிஸ் அடிகளாரின் கருத்தாகும்.

## *விவரணம்*

1. இங்கு சம்பந்தப்படும் செல்வந்தர் இறுதியாக வெளிப்படுத்தும் கருத்தை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர்?
2. எல்லா மனிதர்களுக்குள்ளும் காணப்படும் இயல்பான சுய திறமைகளை அபிவிருத்தி செய்துகொள்வது தொடர்பாக பிள்ளைகளையும் பொதுமக்களையும் உற்சாகமூட்டுவதற்கு இக்கதையை ஒரு கற்பித்தல் வளமாக உம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியுமா?
3. இக்கதையில் இடம்பெறும் கருத்து விளக்கப்படி எஜமான் - சேவகன் தொடர்பை, சமகால தனியார் வியாபாரத்திற்கூடாக உம்மால் தொடர்புபடுத்தி சிந்திக்க முடியுமா?

## *வலியுறுத்தல்*

✪ வெள்ளித் தகரமொன்றை உள்ளும் வெளியும் காவலிட்டுப் பாதுகாக்கும் அரசனைப் போல், தங்களது மனதை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 07. சிறுவர்களுக்குக் கற்பித்தல்

வயதாளியான ஒருவர் தன்வாழ்வில் சூழ்ந்துள்ள துயரங்களைத் தூரமாக்க ஆலோசனை வேண்டி துறவி ஒருவரைத் தேடிவந்தார்.

"நான் என் வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டு வேலை செய்தேன். இப்பொழுது நான் வயதாளி. இதற்கு மேலும் வாழ்வது தேவையற்ற தென்று நினைக்கிறேன்" என்று துறவியிடம் கூறினார்.

"அப்படியென்றால் சிறுவர்களுக்கு ஏதாவது சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கலாமே" என்று துறவியார் பதில் சொன்னார்.

"ஆனால் நான் அந்தளவுக்கு புத்திசாலியோ கல்வியறிவு உள்ளவனோ அல்ல. அதனால் நான் என்னதான் சொல்லிக் கொடுக்க?"- முதியவர் கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் பலாக்காய் சாப்பிட விருப்பமா?" துறவியார் இன்னொரு கேள்வி கேட்டார்.

"ஆம் நான் பலாக்காய் சாப்பிட மிகவும் விருப்பம். பிஞ்சு, காய், பழமென்று எல்லாவற்றுக்கும் அன்றிலிருந்து நான் விருப்பம்" முதியவர் சொன்னார்.

"அப்படியென்றால் நீங்கள் பிள்ளைகளுக்கு பலாக்கன்று நட்டச் சொல்லிக் கொடுங்கள்" துறவியார் ஆலோசனை கூறினார்.

துறவியாரின் கருத்து முதியவருக்கு விளங்கவில்லை. இருந்தும் அவர் அடுத்தநாள் முதல் தனது பணியை ஆரம்பித்தார். ஆனால் முதுமை காரணமாக நொந்து கெட்டுப்போன உடலால் மிகவும் மெல்லத்தான் வேலை செய்தார்.

இந்த வயதாளி சிலநாட்களாக கன்று நட்டி காலத்தைக் கடத்துவதை பல இளைஞர்கள் கண்ணுற்றனர்.

"நீங்கள் இப்படி என்ன செய்கிறீர்கள்?" ஒரு வாலிபன் கேட்டான்.

"நான் பலா நட்டுகிறேன்" முதியவர் கூறினார்.

"நீங்கள் இப்போது இதை நட்டி எப்போது பலா சாப்பிடப் போகிறீர்கள்?" இளைஞன் பரிகாசம் போல் கேட்டான்.

"நான் என் வாழ்நாள் முழுவதும் எனது முற்பரம்பரை நட்டிய மரங்களின் காய்களையே சாப்பிட்டன். எனக்குப் பிறகு வருபவர்கள் சாப்பிடுவற்காகத்தான் நான் இதனை நட்டுகிறேன்" வயதாளி கூறினார்.

வயதானவர் பலாக்கன்று நடுவதைப் பார்த்த பல வாலிபர்களும் சின்னஞ்சிறிசுகளும் இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டனர். எல்லோருக்குமே அம்முதியவர் அதேபதிலையே கூறினார். அவருடைய கதையைக் கேட்ட சிறுவர்களும் வாலிபர்களும் கடுமையாக யோசிக்கத் தொடங்கினர்.

போகப்போக சிறுவர்களும் வாலிபர்களும் தன்னை ஆதர்ஷமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டு பலாக்கன்று நடுவதைக் கண்ட வயதாளி மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தார்.

### *விவரணம்*

1. கற்பித்தல் சம்பந்தமாக சமுதாயத்தில் வேர்பாய்ந்த எந்தக்கூடாத சிந்தனையை இக்கதை வெளிப்படுத்துகிறது.

2. அடுத்தவர்களுக்கு விடயத்தை விளங்கவைப்பதற்கு இந்த முதியவரின் செயற்பாட்டில் உள்ளடங்கியுள்ள சாதகமான வலியுறுத்தல் யாது?

3. ஆசிரியர்களுக்கும் சமூகு சேவையாளர்களுக்கும் இக்கதையினூடாக ஊட்டப்படும் வலியுறுத்தல் என்ன?

### *வலியுறுத்தல்*

✪ சிறியோர் மீது கருணை காட்டாதவனும் முதியோருக்கு மரியாதை செய்யாதவனும், நல்லதை சொல்லிக் கொடுத்து கூடாததை தடுக்காதவனும் என்னைச் சேர்ந்தவனல்ல.

அல்ஹதீஸ்
முகம்மது நபிகள் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. அற்புதமான அறிவுரை

ஒரு சிறுவன் கட்டுப்பாடற்ற வகையில், இனிப்புப் பண்டங்களை சாப்பிடப் பழகியிருந்ததால், அவனது பற்கள் இளமையிலேயே பழுதடைந்து விழுந்து விடுமென்று பயந்த தாயொருத்தி தனது பிள்ளையை அழைத்துக் கொண்டு ஒரு துறவியாரிடம் சென்றாள்.

"எனது பிள்ளை கட்டுப்பாடின்றி இனிப்பு சாப்பிடுகிறான். தயவுசெய்து இவனுக்குப் புத்தி சொல்லுங்கள்" இவ்வாறு தாய் துறவியிடம் வேண்டினாள்.

சற்றுநேரம் யோசித்த துறவி, பிள்ளைக்கு புத்தி புகட்டுவதற்காக அடுத்தவாரம் அழைத்து வருமாறு தாயை அறிவுறுத்தினார்.

ஒரு வாரத்தின் பின்பு அந்தத் தாய் பிள்ளையுடன் துறவியைக் காணச் சென்றபோது, அடுத்தவாரம் வருமாறு அறிவித்தார். இன்னொரு வாரம் கழித்து தாய் தன்பிள்ளையை துறவியாரிடம் அழைத்துச் சென்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதும் துறவி அவளை அழைத்து புத்தி சொல்வதற்காக அடுத்தவாரம் வருமாறு கேட்டுக் கொண்டார்.

துறவி பிள்ளைக்கு புத்திசொல்லி அடுத்தவாரம் வரை காலக்கெடு விதித்ததையிட்டு கோபத்துடனேயே நான்காவது தடவையாக துறவியின் முன்னிலைக்குச் சென்றாள்.

அப்போது துறவி பிள்ளையைப் பார்த்து "மகனே அதிகம் இனிப்பு சாப்பிடுவது கூடாது. அதனால அதிக இனிப்பு சாப்பிடும் பழக்கத்தை உடனடியாகக் கைவிடவும்" என்றார்.

"துறவியாரே என்னை நான்கு தடவை அலையவைத்து இது கொஞ்சத்தையும் சொல்லத்தானா?" கோபமடைந்த பெண் கேட்டாள்.

"உங்கள் பிள்ளையைப் போல நானும் இனிப்புக்குப் பழகியிருந்தேன். இனி நானெப்படி உங்கள் பிள்ளைக்குப் புத்தி சொல்வது? அந்தப் பழக்கத்திலிருந்து முதலில் நான் விடுபடத்தான் காலக்கெடு எடுத்தேன். திரும்பத்திரும்பக் காலக்கெடு விதிக்க நேர்ந்ததும் அதனால்தான். இனிப்பு சாப்பிடும் என் பழக்கத்தை கைவிட்ட பின்பே நான் உங்கள் மகனை எச்சரித்தேன்." தான் காலக்கெடு விதித்த காரணத்தைத் தெளிவுபடுத்தினார்.

## *விவரணம்*

1. துறவியாரின் செயலொழுங்கைப் பார்க்கும்போது உங்களுக்கு ஏற்படும் உணர்வு யாது?
2. கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கும் சமூக விழிப்புணர்வூட்டு வோருக்கும் துறவியின் போதனாமுறை விடுக்கும் சவால் யாது?
3. சமகால ஆசிரியர் பின்புலத்தையும் சமூக சகவாழ்வுப் பின்னணியையும் மதிப்பீடு செய்கையில் வெளிப்படும் பிரதான பின்னடைவை போக்குவதற்கு, இக்கதை தரும் பெறுமானம் யாது?

## *வலியுறுத்தல்*

✪ முதலில் தங்களைத் தூய்மையானவர்களாக மாற்றிக் கொண்ட பின்னரே அடுத்தவர்களுக்கு போதனை செய்யவேண்டும். அவ்வாறு செய்பவர் ஒருநாளும் தேல்வியடைமாட்டார்.

தம்மபதம்

கௌதம புத்தர்பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. புரிந்துகொள்ள வைப்பதற்காக....

முகம்மது நபிகள் நாயகம் அவர்கள் இஸ்லாத்தைப் போதிக்க ஆரம்பித்த காலகட்டத்தில் உருவ வழிபாடு அன்றைய சமூகத்தில் மேலோங்கியிருந்தது. நபியவர்கள் இந்த உருவ வழிபாட்டைக் கடுமையாக விமர்சித்ததனால் அதில் மூழ்கிப் போயிருந்தவர்கள் கோபத்திற்குள்ளாகினர். அவ்வாறு கோபமுற்றிருந்த ஒரு வயதாளிப் பெண் நபியவர்களுக்குத் திட்டியபடி தனது வீடுவாசலை விட்டும் வேறு பிரதேசத்திற்குச் செல்லப் பாதைக்கிறங்கினாள்.

அவள் செல்லும் வழியில் ஒருவரைச் சந்தித்தாள். அவர் அவள் மீது மிகுந்த கருணை கொண்டு அவளது பொதிகளைத் தூக்கிச் செல்ல முன்வந்தார். இருவரும் நடந்து செல்கையில் ஊரைவிட்டு வெளியேறுவது ஏனென்று அந்தப் பாட்டியிடம் அவர் கேட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவருக்கு பதிலளிக்கும் வகையில் பெண்மணி நபிகளார் மீது வசைபாடியபடி நடந்தாள். பயணத்தின் இறுதியில் கிழவிக்குத் தனக்குதவியவர் பற்றி தகவல் அறிந்து கொள்ளும் அவசியமேற்பட்டது. "நீங்கள் யார்?" என்று அவரிடம் விசாரித்தார்.

"அம்மா நான்தான் நீங்கள் இதுவரை திட்டித் தீர்த்த முகம்மது நபி"- புதியவர் பதிலளித்தார்.

"இந்தளவு கருணையான நல்லமனிதருக்கா இவ்வளவு நேரம் திட்டினேன்." என்று சிந்தித்து அவள் பச்சாதாபப்பட்டாள்.

இறுதியாக அந்த மூதாட்டி பயணத்தைக் கைவிட்டுவிட்டுத் தனது ஊருக்கே திரும்பிவந்து வாழத் தொடங்கினாள். அன்று முதல் அவள் நபிகள் நாயகத்தின் போதனைகளை ஏற்றுக் கொண்டாள்.

### *விவரணம்*

1. மூதாட்டி ஊரைவிட்டுப் போகுமளவுக்கு கடும் முடிவுக்கு வருவதற்கு அவளது எத்தகைய சுபாவம் காரணமாகியது?

2. முகம்மது நபிகள் நாயகம், மூதாட்டியின் எண்ணத்தை மாற்றுவதற்கு எடுத்த செயல்முறை தொடர்பாக உமது மதிப்பீடு யாது?

3. சமூக விழிப்புணர்வு நடவடிக்கையில் உமது பின்னணியை வளமூட்டுவதற்கு இக்கதை உமக்குத்தரும் ஆதர்ஷம் யாது?

### *வலியுறுத்தல்*

✪ குரோதக்காரனை அன்பினாலும் கெட்டவனை நற்குணத்தாலும் உலோபியை வாரிவழங்குவதினாலும் பொய்காரனை உண்மையின் மூலமாகவுமே வெல்லவேண்டும்.

தம்மபதம்

கௌதம புத்தர்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சத்தியத்திற்கு எதிராகத் தாக்குதல்

முகம்மது நபிகள் நாயகமவர்கள் தமது உபதேசங்களை ஆரம்பித்த காலத்தில் அவருக்கு மக்காவில் எந்த வரவேற்பும் இருக்கவில்லை. அதனால் அவர்கள் தனது மார்க்கப் போதனைக்காகத் தாயிப் நகரை நோக்கிச் சென்றார்.

தாயிப் பிரதேசத்தில் முகம்மது நபியவர்களின் போதனையை அந்த மக்கள் ஏற்காததுடன் அவர்கள் விரோதம் தெரிவிக்க முற்பட்டனர். இறுதியாக அவர்கள் தமது சிறுவர்கள் மூலமாக நபியவர்களுக்குக் கற்களாலும் முட்களாலும் அடிக்குமளவுக்குக் கோபப்பட்டனர்.

தாயிப் பிரதேசத்தையும் விட்டுத் திரும்பிய நபியவர்கள் இடைநடுவில் ஒரு மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுத்தார்கள். அங்கு வானவர் ஜிப்ரில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றி, "தாயிப் பிரதேசத்திற்கு இருபக்கமாகவுள்ள மலை இரண்டையும் மோத வைத்து அந்தப் பிரதேசத்தை அழித்துவிடட்டுமா?" என்று கேட்டார்கள்.

அப்போது நபியவர்கள் தேவதூதரைப் பார்த்து மக்களை அழிப்பதற்காக அல்ல, அவர்களுக்கு நல்லதைச் சொல்லிக் கொடுக்கவே நான் படைக்கப்பட்டுள்ளேன். இவர்கள் என்னை ஏற்காதது ஏனென்றால் அவர்கள் விளங்கும்படியாக என்னால் சொல்ல முடியாது போனதால்தான். ஆனாலும் அவர்களது அடுத்த பரம்பரையினர் நான் சொல்லிக் கொடுத்ததை ஏற்பார்கள் என்றார்.

## *விவரணம்*

1. நபியவர்கள் முகம் கொடுத்த சந்தர்ப்பத்திற்கு நீர் முகம் கொடுத்திருந்தால் நீர் எவ்வாறு நடந்து கொள்வீர்?
2. தங்களது கருத்தை சமுதாயத்திற்கு முன்வைக்கையில் ஆசிரியரோ, சமூக விழிப்பூட்டுநரோ முகம் கொடுக்கக்கூடிய பிரச்சினைகளை இக்கதைக்கூடாக அறிந்து கொள்வது எப்படி?
3. நபியவர்களின் புதுவாழ்வுப் பின்புலத்தில் வெட்டித் தெரியும் பண்புகள் என்ன?

## *வலியுறுத்தல்*

✪ உலகத்தில் பெரும்பாலோர் துக்கத்துக்குள்ளானவர்களே. அதனால் தங்களுக்குள் ஏச்சும் பேச்சும் சண்டை சச்சரவுமாய் பழகுகின்றனர். யுத்தகளத்தில் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து பொறுமை காப்பதுபோல் நானும் பலபேரின் ஏச்சுப் பேச்சுக்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஆசிரியரின் பொருள்

ஓர் ஆசிரியர் தூரப் பயணமொன்று மேற்கொள்ளக் கப்பலில் ஏறினார். அவர் பயணித்த கப்பலில் அநேகமானவர்கள் வியாபாரிகளே. தங்கள் வியாபாரப் பொருட்களோடு பிரயாணம் செய்து கொண்டிருந்த அவர்கள் ஆசிரியரையும் வியாபாரியாகவே நினைத்தனர்.

கப்பலில் இரவுச் சாப்பாடு உண்ணும் வேளையில் பிரயாணிகள் ஒருவரோடொருவர் உரையாடி அறிமுகமாகத் தொடங்கினர். அதிகமானவர்கள் தாங்கள் நடாத்திச் செல்லும் வியாபாரம் பற்றியும் அதற்காகக் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றியும் மிகுந்த உற்சாகத்தோடு எடுத்துக் கூறினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஆசிரியரின் நிலைபற்றியும் அறிந்து கொள்ளும் அவசியமிருந்தது. ஆசிரியர் தான் உலகிலேயே பெறுமதியான பொருளையே எடுத்துச் செல்வதாக பதில் சொன்னார். அவரது பேச்சினால் ஆச்சரியத்திற்குள்ளான பயணிகள், ஆசிரியரிடம் உள்ள வியாபாரப் பண்டம் என்னவென்று தேடிப் பார்க்க முனைந்தனர்.

இருந்தும் அவரிடம் எந்த வியாபாரப் பொருளும் இல்லையென்று தெரிந்துகொண்ட வியாபாரிகள் கிண்டலாகச் சிரிக்கத் தொடங்கினர். அந்தச் சந்தர்ப்பத்திலிருந்து ஆசிரியரை ஒரு மடையனாகவே அவர்கள் நடாத்தத் தலைப்பட்டனர்.

பலநாட்களாகப் பயணம் செய்த கப்பல் எதிர்பாராதவிதமாக புயலுக்குள் சிக்கிக் கொண்டது. அடித்துச் செல்லப்பட்ட கப்பல் கற்பாறையில் மோதி சிதறிப் போனது. பயணிகள் அனைவரும் கடலில் குதித்து எப்படியோ உயிரைக் காப்பாற்றிக் கொண்டனர். ஆனால் தாம் கொண்டு வந்த வியாபரப் பொருட்களை அவர்களால் காப்பாற்றிக் கொள்ள முடியாத அப்பாவிகளாயினர். தாம் கொண்டுவந்த அனைத்தும் கடற்பசிக்கு இரையானதால், தமது வயிற்றுப் பசிக்காகப் பிச்சையெடுக்க வேண்டி நேர்ந்தது. ஆசிரியரோ நகர மத்திக்குச் சென்று சனத்தைக் கூட்டித் தனக்குத் தெரிந்ததைக் கற்பிக்கத் தொடங்கினார். அவர் பற்றி செய்தி நாற்புறமும் பரவிச் சென்றது. சனம் அவரைச் சுற்றிக்கொண்டு பல்வேறு அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தனர். அதற்காகப் பணம்கூடக் கொடுக்கத் தொடங்கினர்.

ஆசிரியர் தனக்குக் கிடைத்த பணத்தைத் தன்னோடு அகதியாகிப் போன வியாபாரிகளுடன் சேர்ந்து பகிர்ந்து கொண்டார்.

ஆசிரியர் முன்பொரு தடவை கப்பலில் வைத்துச்சொன்னதின் ஆழமான அர்த்தம் வியாபாரிகளுக்கு இப்போது புரிந்தது. கல்வி எல்லாவற்றையும் விட பெறுமதியானதென்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***விவரணம்***

1. கப்பலில் பயணம் செய்தோரிடையே ஆசிரியர் எப்படி விசேட மானவராகிறார்?

2. ஆசிரியர் சமூகத்தில் ஊடாடும் பொழுது தங்களது தொழில் அபிமானத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ள இக்கதைதரும் பங்களிப்பு என்ன?

3. உறுதியான சமூக மாற்றமொன்றுக்காகப் பங்களிப்புச் செய்ய ஆசிரியர் எவ்வாறு தன்னை அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டும்?

***வலியுறுத்தல்***

✪ அறிவாளியின் ஏழ்மையைவிட, அறிவற்றவனின் செல்வம் துரதிர்ஷ்டமானது.

பகவத் கீதை

✪ பெருநிலத்திலுள்ள உப்புபோல் இருந்துவிடுங்கள்.

புனித பைபிள்
யேசுநாதர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. போருக்கான அழைப்பு

அரச கட்டளை அறிவிப்பாளன் நகரத்திற்கு வந்தான். அவன் சகலரையும் நகர மத்திக்கு வருமாறு கட்டளையிட்டான். அரசன் அடுத்த நாட்டின் மீது யுத்தப் பிரகடனம் செய்துள்ளதாகவும், யுத்தத்தில் வெற்றிபெறும் நோக்கில் இளைஞர்களை தலைநகருக்கு வந்து இராணுவத்தில் சேருமாறும் வேண்டுகோள் விடுத்தான்.

நகரத்தில் வாழ்ந்த பலமிக்க வாலிபர்கள் தங்களுக்கு இராணுவத்தில் சேர்வதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பையிட்டு உற்சாகமடைந்தனர். யுத்தத் திற்கு போகமுடியாத பலவீனர்களையும் ஊனமுற்ற இளைஞர்களையும் அவர்கள் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

இந்த உற்சாகமான வேளையில்தான் ஒரு துறவி நகரத்திற்கு வந்தார். நடப்பதைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்த அவர் அருகேயி ருந்த மேடைக்கேறி "முதுமை அடையும்வரை வாழவிரும்புபவர்கள் யார்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் தங்கிவிடும் நோய்வாய்ப்பட்டவர்களா? இல்லை யுத்தத்திற்குச் செல்பவர்களா?"

எல்லோரும் மௌனமாகினர். அப்போது ஊனமுற்ற ஓர் இளைஞன் உயர் குரலில் "என்னைப் போன்றவர்கள்" என்று பதில் கூறினான்.

அதன் பின்னர் துறவி தனது இரண்டாம் கேள்வியை முன்வைத்தார்.

"யார் அடுத்த பரம்பரைக்கு பெற்றோராக விரும்புவது? யுத்தத்திற்கு செல்லத் தயாராகிக் கொண்டிருப்பவர்களா? இல்லை, வீட்டிலிருக்கும் நோய்நொடிக்குள்ளானவர்களா?"

அக்கேள்விக்கும் எல்லோரும் மௌனமாகவிருந்தனர். அப்பொழுது இன்னொரு ஊனமுற்ற வாலிபன் தனது குரலுயர்த்தி, "என்னைப் போன்றவர்" என்று பதில் கொடுத்தான்.

வலிமை மிகுந்த வாலிபர்கள் ஒருகணம் நிதானித்து யோசித்தனர். அவரவர் நிலைமை பற்றிக் கலைந்துரையாடினர். சற்றுநேரத்தின் பின்பு எல்லோருமே, அரசன் தாமாக உருவாக்கிக் கொண்ட யுத்தத்தை அவர் விரும்பிய விதமாகச் செய்ய இடமளித்துவிட்டு எல்லோரும் வீட்டில் தங்கிவிடத் தீர்மானித்தனர்.

### *விவரணம்*

1. யுத்தம் செய்பவனை வீரனாக உயர்த்திவைக்கும் பின்னணியில் இக்கதை வெளிப்படுத்தும் கருத்தை உம்மால் நியாயப்படுத்த முடியுமா?
2. இளைஞர்கள் இறுதியாக எடுத்து முடிவுபற்றி உமது கருத்து யாது?
3. இளைஞர்களின் முடிவை, எந்தக் கற்பித்தல் முறையினூடாக துறவியார் மாற்றியமைத்தார்.

### *வலியுறுத்தல்*

✪ உயிரினங்களுக்கு இம்சை செய்பவனும், கருணை அனுதாபமின்றி நடப்பவனும், கிராமங்களை அழிப்பவனும், குழப்படி செய்பவனும் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவனாயினும் அவன் கெட்டவனே.

கௌதம புத்தர்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. போற்றுதலும் தூற்றுதலும்

புத்தர் பெருமானை பின்பற்றுபவர்கள் அல்லாத சுப்பியவும் அவரது சேவகனான பிரஹ்மத்தவும் புத்தரின் சீடர்கள் மத்தியில் காணப்பட்டனர்.

சுப்பிய புத்தரின் இயல்புகளை பாராட்டத் தொடங்கியதற்கிடையில் பிரஹ்மதத்த புத்தர் பெருமானை விமர்சிக்கத் தொடங்கினான். இந்த இருவரதும் கலந்துரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சீடர்களான பௌத்த பிக்குகள் அதுபற்றி அதிர்வுக்குள்ளானார்கள். அடுத்தநாள் புத்தர் பெருமானை சந்தித்த அவருக்கு நெருக்கமான பிக்குகள் சுப்பிய, பிரஹ்மதத்த ஆகியோரின் போற்றுதல், தூற்றுதல் பற்றி பிரஸ்தாபித்தனர்.

இருந்தும், தன்னைப் பற்றிக் குறை கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியோ தன்னைப் பற்றிக் குற்றம் சொன்னதையிட்டு வெறுப்போ வெளிப் படுத்தவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களை யாராவது பாராட்டினாலும் யாராவது திட்டினாலும் மகிழ்ச்சியோ கோபமோ கொள்ள வேண்டாம். உண்மையைக் கண்டு தெளிய அது தடையாக மாறும்"- என்று அந்த இருவருக்கும் புத்தபெருமான் எடுத்துச் சொன்னார்.

## *விவரணம்*

1. தமக்குக் கிடைக்கும் பாராட்டையும் நிந்தனையையும் நடுநிலையாக நோக்குவது எவ்வாறான இயல்பாக உமக்குத் தோன்றுகிறது.

2. பாராட்டையோ நிந்தனையையோ மனதுக்கெடுத்தல் உண்மையைத் தரிசிக்க குந்தகமாக அமைவது எவ்வாறு?

3. ஆசிரியர், சமூக விழிப்பூட்டுநர் போன்றோர் இந்தத் தன்மையை ஏன் விருத்தி செய்து கொள்ளவேண்டும்?

## *வலியுறுத்தல்*

✪ மோசமான பழம் தரும் நல்ல மரமோ, நல்ல பழம்தரும் மோசமான மரமோ கிடையாது. ஒவ்வொரு மரத்தையும், அதன் பழத்திலிருந்தே அறிந்து கொள்கிறோம். முள்ளுமரத்திலிருந்து அத்திப்பழம் பறிக்க முடியாது. நெருஞ்சி பற்றையிலிருந்து முந்திரிகைப் பழம் ஆய இயலாது. நல்ல மனிதனின் மனதில் ஆழ்ந்துள்ள நல்லவற்றிலிருந்து நல்லவிடயமும் மோசமான மனிதனின் மனதிலிருந்து மோசமான விடயமும் வெளிப்படும். ஏனெனில் மனதால் பொங்கிவருபவையே வாயால் வெளிப்படும்.

புனித பைபிள்
யேசுநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. அனாதைச் சிறுவனின் மகிழ்ச்சி

ஈத் பெருநாள் தினத்தன்று மதக் கடமைகள் சிறப்பாக நடந்தேறின. சிறுவர் முதியவர் என்ற வேறுபாடின்றி எல்லோருமே புத்தாடை புனைந்து நறுமணம் கமழ கலகலப்போடு பேசி சுற்றாடலை மகிழ்ச்சி நிரம்பியதாக மாற்றிக் கொண்டிருந்தனர்.

களிப்பினால் பூரித்துப் போயிருந்த பிள்ளைகள் மத்தியில் கஞ்சல் உடையோடு கண்ணீர் வடித்தபடி ஒரு மெல்லிய சிறுவன் ஒரு பக்கமாக ஒதுங்கியிருந்ததை முகம்மது நபிகள் நாயகம் கண்ணுற்றார். அவர் மெல்ல மெல்ல அச்சிறுவனை அணுகினார். “மகனே நீ ஏன் இப்படிச் சோகத்தோடிருக்கிறாய்?” என்று வினவினார். “என்னைத் தனியே இருக்கவிடுங்கள்” என்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் சிறுவனோடு இன்னும் அன்பாகக் கதைத்து, அவனது தலைமுடிக் கூடாக விரல்களைச் செலுத்தித் தடவியபடி "நல்லது மகனே, உனது மனம் கவலையில் மூழ்கியிருப்பது ஏனென்று சொல்லமாட்டாயா?" என்று கேட்டார். அப்பொழுது அவன் நபிகள் நாயகத்தின் முகத்தைப் பாராமல் விக்கிவிக்கி சொல்ல ஆரம்பித்தான்.

"நபிகள் நாயகத்தின் வழியில் புனித யுத்தத்தில் ஈடுபட்டு எனது தகப்பன் இறந்துவிட்டார். எனது தாய் இன்னொரு திருமணம் செய்து வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார். என் தகப்பனின் சொத்துக்களை மற்றவர்கள் பறித்துக் கொண்டனர். நான் தாயிடம் சென்றபோது சிறிய தகப்பன் என்னை விரட்டிவிட்டார். நான் ஓர் அனாதை. எல்லாப் பிள்ளைகளும் மகிழ்ச்சியோடிக்கும்போது, எனக்கு சாப்பிட வழியில்லை. தூங்க இடமுமில்லை"

சிறுவனின் கதைகேட்டு நபியவர்கள் அதிர்வுக்குள்ளானார். இருந்தும் அதை மறைத்துக் கொண்டு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு....

"பரவாயில்லை மகனே! என்னுடைய தாய், தந்தையரும் எனது சிறுவயதிலேயே காலம் சென்றுவிட்டார்கள்" என்றார். அப்போது அச்சிறுவன் தலைஉயர்த்தி அந்தப் பெரியவரைப் பார்த்தபோது அது நபிகள் நாயகம் என்பதைத் தெரிந்து கொண்டு தடுமாறினான்.

"நான் உனது தகப்பனாகவும் ஆயிஷா நாயகி உனது தாயாகவும் ஃபாத்திமா நாயகி உனது சகோதரியாகவும் அமைந்தால் உன்னால் மகிழ்ச்சியோடு வாழ முடியுமல்லவா?" என்று இங்கித மொழியில் கேட்டார்.

சிறுவன் தலையாட்டி "ஆம்" என்றான்.

நபிகளார் சிறுவனைக் கைகளால் பிடித்தபடி வீட்டுக்கழைத்துச் சென்றார். வீட்டை அடைந்த நபியவர்கள் தன் மனைவியை அழைத்து "இதோ உங்களுக்கொரு மகன்" என்றார்.

ஆயிஷா நாயகி பிள்ளையை ஏற்றுத்தன் கைகளால் கழுவி, புத்தாடை அணிவித்து, வயிறு நிறைய உணவூட்டி, "சரி வெளியே போய் மற்றப் பிள்ளைகளோடு விளையாடவும்" என்று அனுப்பிவைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனில் மாற்றம் கண்ட அடுத்த பிள்ளைகள் அவனைச் சுற்றிவளைத்தபடி விசாரித்தார்கள். தன்னை நபியவர்கள் கவனித்த விதத்தை சிறுவன் எடுத்துக் கூறினான்.

"ஐயோ எங்கள் தங்கைமாரும் இல்லாமல்போய் நாங்கள், உதவியற்றுப் போனால் எவ்வளவு நல்லது" கேட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுவன் சோர்ந்து போவனாக இவ்வாறு கூறினான்.

### *விவரணம்*

1. இன்றைய வகுப்பறை அமைப்பு, பயிற்சி பெற வருவோர் சுபாவம் என்பவற்றை இக்கதையில் வரும் சிறுவனின் சுபாவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலுமா?
2. ஆசிரியர் ஒருவரினதோ, சமூக விழிப்புணர்வாளரினதோ பின்னணியை விளங்கிக் கொள்வதற்கு, இக்கதை உமக்குத்தரும் அழுத்தம் யாது?
3. நபியவர்கள் சிறுவனின் வாழ்வை மகிழ்ச்சிப்படுத்த அவருக்குள்ளிருந்த, ஆசிரியர்களிடையேயும் விழிப்புணர்வாளர்களிடையேயும் இருக்கவேண்டிய இயல்பு யாது?

### *வலியுறுத்தல்*

✪ இதயத்தில் அன்புமயமில்லாத வாழ்வு, பாலைவனத்தில் அழகற்று வளர்ந்த மரம் போன்றது. அவனது உள்ளம் அன்பில்லாததால் பாழடைந்து போய் விடும். உடலின் வெளிப்புறம் மாத்திரம் அழகாக இருந்து என்ன நன்மை? இதயத்துள் உறைந்துள்ள அன்பு இன்னொருவரை வாழவைக்கும். அது இல்லாதபோது உடல் சருமத்தால் மூடப்பட்ட எலும்புக்கூட்டுக் குவியல்தான்.

– திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. யானை பார்த்த குருடர்கள்

நீண்ட காலத்திற்கு முன்பு செவத் நகரத்தில் தார்மீக அரசனொருவன் வாழ்ந்துவந்தான். அவரது மந்திரிமார்களிடையே ஒரு சமயம் அபிப்பிராய பேதமேற்பட்டது. தத்தமது கருத்தே சரியென அவர்கள் வாதாடியதால் உண்மையை உணர்த்துவதற்காக அரசன் அதில் சம்பந்தப்பட நேர்ந்தது.

தனது அரச பிரஜை ஒருவரை அழைத்த அரசன் நாட்டிலுள்ள பிறவிக் குருடர் சிலரை அரச மாளிகை முற்றத்திற்கு கூட்டி வருமாறு கட்டளையிட்டான். அதேபோல் மங்கள யானையையும் அவ்விடம் எடுத்து வருமாறு யானைப் பாகன்களுக்கு உத்தரவிட்டான்.

பின்னர் அரசன் ஒவ்வொரு குருடராகச் சென்று யானையைத் தொட்டுப் பார்த்து, யானை எத்தகையதொரு மிருகமென்பதை சொல்லுமாறு வேண்டினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குருடராக யானை அருகே சென்று அதனைத் தொட்டுத்தடவி தாங்களுக்கு விளங்கிய வகையில் அதன் சுபாவத்தைக் கூறினர்.

ஒரு குருடன் யானையைத் தொட்டுப் பார்த்துவிட்டு வந்து "யானை குடம் போன்றது" என்றான். அவன் யானையின் வயிற்றுப் பக்கமாகவே தடவினான்.

யானையின் காதுப் பகுதியை தொட்டுப் பார்த்தவன் "யானை சுளகு போன்றது" என்றான்.

இன்னொருவர் யானையைத் தொட்டுப் பார்க்கச் சென்றபோது அவனது கைகளுக்கு யானைத் தந்தமே அகப்பட்டது. யானை கடப்பாரை போன்றது என்றான் அவன்.

யானையின் ஒரு காலைத் தடவிப் பார்த்த குருடன், யானை உரல் போன்றதென்றான்.

அதை மறுத்துக் கருத்துத் தெரிவித்த ஒருவன் "யானை உரல் போன்றதென்று சொல்வதெப்படி? யானை சரியாக விளக்குமாறு போன்றது" என்று வலியுறுத்திக் கூறினான். அவனுக்கு யானையின் வாலே அகப்பட்டிருந்தது.

யானையைப் பார்த்து முழுமையற்ற முடிவுக்கு வந்த பிறவிக்குருடர்கள் போன்றவர்கள்தான், பல்வேறு அபிப்பிராயம் கொண்டவர்களும் என்ற இறுதியாக அரசன் எல்லோருக்கும் புரியவைத்தான்.

### *விவரணம்*

1. எங்கள் மத்தியிலுள்ள பல்வேறு சமூகச் சிக்கல்களை, பிழையற்றவகையில் விளங்கிக்கொள்ள, இக்கதை எமக்குத் தரும் வழிகாட்டல் யாது?

2. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் முறை தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சமூகத்திலே பல்வேறு கருத்துக்களிலிருந்து சரியானதை தெரிவு செய்து கொள்ள இக்கதையை எவ்வாறு பிரயோகிக்கலாம்?

3. சரியான முடிவெடுப்பதற்கோ தீர்மானத்திற்கு வருவதற்கோ அவசியமான முக்கியமான காரணியாக இக்கதை வெளிப்படுத்திக் காட்டுவதென்ன?

## *வலியுறுத்தல்*

✪ பெறுமதியானதை பெறுமதியற்றதாகவும், பெறுமதியற்றதை பெறுமதியானதாகவும் பார்க்கும் பிழையான உணர்வுள்ளவர்களுக்கு ஒருநாளும் பெறுமதியானது கிட்டுவதில்லை.

பெறுமதியானதை பெறுமதியானதாகவும் பெறுமதியற்றதை பெறுமதியற்றதாகவும் காணும் சரியான உணர்வுள்ளவர்கள் நிச்சயமாக பெறுமதியானதை அடைவர்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. கொடுத்தது மீளக் கிடைத்தது

**கௌ**தம புத்தர் பெருமான் சேவெத் நகர விகாரையில் ஒருநாள் ஒரு பிராமணன் அவரை சந்திக்க வருகை தந்து மிகவும் கடுமையானவகையில் வசைபாடத் தொடங்கினார். அவரது அநுதாபிகளை தன்பக்கம் திருப்பிக் கொள்வதே அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

புத்தர்பெருமான் பிராமணனின் கோபம் மிகுந்த வார்த்தைகளை கேட்டபடி மௌனமாக இருந்ததால் பிராமணனின் கோபம் இன்னுமின்னும் மேலோங்கியது. அப்போது அவர் மிக மோசமான வார்த்தைகளைக் கூட பிரயோகித்து ஆக்ரோஷமாக கத்தத் தொடங்கினார். பிராமணன் நெடுநேரமாக திட்டித்தீர்த்தபோதும் அன்னார் இறுதிவரை பொறுமையோடு மௌனம் காத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஏச்சினால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்பதை விளங்கிக்கொண்ட பிராமணன் வெளியேற முனைவதைக் கண்ணுற்ற கௌதம புத்தர் "பிராமணரே உங்களுக்கு நண்பர்கள் உள்ளனரா?" என்று கேட்டார்.

"ஆம். உங்களைப் போலல்ல எனக்கு நிறைய நண்பர்கள் மட்டுமல்ல, உதவியாளர்களும் உள்ளனர்" என்று பதில் கூறினார்.

"உங்கள் நண்பர்கள் உங்களைச் சந்திக்க அடிக்கடி வருவார்களா?"

"ஆம் அவர்கள் எப்பொழுதும் வந்து எனது சுகதுக்கத்தைக் கவனிப்பார்கள்"

"அவர்கள் உங்களைப் பார்க்க வரும்போது நீங்கள் அவர்களுக்கு உண்ணக் குடிக்கக் கொடுப்பீர்களா?"

"ஆம் எல்லோரையும் உபசரிப்பது எனது பழக்கம்"

"ஏதாவது காரணத்தால் உங்கள் நண்பர்கள் உங்கள் உபசரிப்பை ஏற்காதுவிடும் சந்தர்ப்பங்களுண்டா?"

"ஆம். அவர்களது வயிறு நிறைந்திருந்தாலோ, சுகவீனமுற்றிருந்தாலோ அவர்கள் அவற்றை ஏற்காது விடுவதுண்டு"

"சரி அவர்கள் நிராகரிக்கும் உணவை நீர் என்னா செய்வீர்?"

"ஏன் பெருந்தகையீர், உங்களால் இந்தவிடயத்தையாவது விளங்கிக் கொள்ள முடியாதா? அதை நானும் எனது மனைவியும் சாப்பிடுவோம்" புத்தபெருமானை நையாண்டியாகப் பார்த்தபடி சொன்னார்.

"நீங்கள் செய்வது சரிதான் பிராமணரே. நீங்கள் இதுவரை பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான சொற்களையும் குற்றச்சாட்டுக்களையும் என்மீது சுமத்தி னீர்கள். நான் அவை எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அவை யெல்லாம் உங்களுக்கே சொந்தம். நீங்கள் அதையெல்லாம் உங்கள் வீட்டுக்குக் கொண்டு போய் உங்கள் மனைவியோடு பகிர்ந்து அனுபவி யுங்கள்" என்ற கௌதம புத்தர் பெருமான் அவ்விடத்தால் விலகிச் சென்றார்.

### *விவரணம்*

1. தனது எதிராளியை நல்லவராகக் கொள்வதற்காக புத்தர்பெருமான் பயன்படுத்திய நிபுணத்துவம் என்ன?

2. காரணங்களைப் புரியவைப்பதற்காக ஆசிரியர், சமூக விழிப்பூட்டு நர்களுக்கு இக்கதை வெளிப்படுத்தும் முறை என்ன?

3. மோதல் குறைப்புக்கான வழிமுறைகளாக புத்தர் பெருமான் பயன்படுத்திய உபாயம், சமகால சமூகத்திற்கு எந்தளவுக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளலாம்?

### *வலியுறுத்தல்*

✪ மிகப் பெரும் பாரத்தை சுமப்பவனல்ல பலமான மனிதன். கோபமடையும் போது, தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொள்பவனே பலவான் ஆவான்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. அறிவுரையை முந்தும் ஆதர்ஷம்

அநுருத்த எனும் தேரர் ஒருநாள் புத்தபெருமான் தர்மபோதம் செய்து கொண்டிருக்கும்போது தூங்கிவிட்டார். அதனால் தனக்கேற்பட்ட பின்னடை வையிட்டு அவர் வெகுதூரம் வருந்தினார். தான் மனப்பக்குவம் அடையும் வரையில் தூங்குவதில்லையென்ற வைராக்கியதோடு ஞானம்பெற முயற்சித்ததால் காலப் போக்கில் கண்தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

கண் குருடானபோதும் அநுருத்த தேரருக்கு தனது வேலைகளைத் தானே செய்து கொள்ளவேண்டிய நிலை. இருந்தும் கிழிந்துவிடும் தனது ஆடையைத்தை தைத்துக் கொள்ள மாத்திரம் அவரால் முடியவில்லை.

அநுருத்த தேரரின் ஆடையைத் தைத்துதவ பொருத்தமான பிக்கு ஒருவரைத் தேடிக்கொண்டு ஆனந்த தேரர் அங்குமிங்கும் அலைகையில் புத்தபெருமானைச் சந்தித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பமான நிலையில் அங்குமிங்கும் ஓடித்திரிவது ஏனென்று புத்தபெருமான் ஆனந்ததேரரிடம் வினவினார்.

"சுவாமி நான் உடை தைப்பதற்கு திறமையுள்ள பிக்கு ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன் அநுருத்த தேரருக்கு உதவுவதற்கு" ஆனந்த தேரர் பதில் சொன்னார்.

"இனி நீங்கள் ஏன் அதை என்னோடு சொல்லவில்லை" என்று புத்தர் பெருமான் கேட்டார்.

"நீங்கள் எங்கள் தலைவர் மட்டுமல்ல, ஞானம் நிரம்பியவரும் கூட. சாதாரண பிக்குகள் செய்யக்கூடியதை உங்களிடம் எப்படிச் சொல்வது?"- ஆனந்த தேரர் சொன்னார்.

"இல்லை ஆனந்த. நானும் பிக்கு சமூகத்தைச் சேர்ந்த ஒருவன். அதனால் நாங்கள் எங்களுடைய வேலைகளைப் பரஸ்பரம் ஒத்துழைப்போடு செய்து கொள்ளவேண்டும்" என்ற புத்தபெருமான் அநுருத்த தேரரின் அறையை நோக்கி, தடுக்க முனைந்த முயற்சியை முறியடித்துக் கொண்டு நடந்தார்.

## *விவரணம்*

1. உண்மையான சமூகத் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப, இந்தக் கதையை மிகச் சிறந்த கற்பித்தல் மூலாதாரமாக எடுத்துக் கொள்வதன் முக்கியத்துவம் என்ன?
2. தற்கால சமூகத் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புகையில், புத்தபெருமான் தந்த ஆதர்ஷத்தை, கடந்த காலங்களில் சமூகத்திற்கு வழங்க முடிந்த சில சந்தர்ப்பங்களை நினைவுபடுத்த முடியுமா?
3. ஆசிரியர்களும் சமூக விழிப்புணர்வாளர்களும் தமது பின்புலத்தை வளமாக்கிக்கொள்ள இக்கதை உங்களில் ஏற்படுத்தும் அழுத்தம் யாது?

## *வலியுறுத்தல்*

✪ தலைவராக வர விரும்புவோர் எப்பொழுதும் கடைசி நபராகவும், சகலரதும் சேவகனாகவும் இருக்க வேண்டும்.

புனித பைபிள்
யேசுநாதர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. உயர்ந்த இனம்

புத்தர் பெருமானின் புத்திநுட்பத்திற்கு சவால் விடுவதற்கு, அவரது வாழ்நாள் முழுவதும் பிராமணர்கள் பல்வேறு உபாயங்களைக் கையாண்டனர். அறிவுரீதியான விவாதத்தில் புத்தர் பெருமானைத் தோற்கடிக்க பிராமணர்கள் மேற்கொண்ட தந்திரங்கள் ஒன்றிரண்டல்ல.

ஒருமுறை, புத்தபெருமான் முன்வருமிடத்து அஸ்ஸலாயன வாலிபனை விவாதத்தில் ஈடுபடுத்த பிராமணர்கள் யோசித்தனர். அவன் ஒரு வியாபாரியாகவிருந்த போதிலும், ஏனைய வியாபாரிகள் மத்தியில் அவன் அறிவாலும் புத்திநுட்பத்தாலும் பிரகாசித்தான். பிராமணர்களின் கெஞ்சுதலைத் தவிர்க்க முடியாத நிலையில அஸ்ஸலாயன புத்த பெருமானுடன் விவாதத்திற்குச் சென்றபோதும் வெற்றி பற்றி எந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையும் வைக்கவில்லை. புத்தரின் ஞானத்திறமையை அவன் நன்றாகவே அறிந்து தெளிந்திருந்தான். குறிப்பிட்ட விவாதத்திற்குச் சென்ற அஸ்ஸலாயன புத்தர் பெருமானை விழித்து இவ்வாறு கூறினான்.

"கௌதமர் அவர்களே! பிராமணர்கள் சகல மக்கள் மத்தியிலும் மேலானவர்களாவர். அடுத்த அனைவரும் தாழ்ந்தவர்கள். பிராமணர் உயர்வம்சத்தினர். அதனால் உயர்ந்தவர்கள். அடுத்தவர்கள் கீழ்சாதிக் குலத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் கீழானவர்கள். பிராமணர் கள் வெள்ளைத்தோல் கொண்டவர்கள். பெரிய பிராமணரின் வாயினூடா கப் பிறந்ததால் பிராமணர்கள் நிச்சயம் மேலோர்தான். அடுத்தவர்கள் கீழே பிறப்புடையவர்கள். இது சம்பந்தமாகத் தங்களது கருத்தென்ன?"

"அஸ்ஸலாயன பிராமணியப் பெண்களுக்கும் மாதாந்த ருது ஏற்படுகிறது. அவர்கள் கர்ப்பிணிகளாகின்றனர். பிள்ளை பெறுகிறார்கள். இனி அவர்கள் பெரிய பிராமணரின் வாயினால் பிறப்பதாக எப்படிச் சொல்கிறீர்கள்?" புத்த பெருமான் பதிலாக இன்னொரு தர்க்கத்தை முன்வைத்தார்.

"ஆனாலும், கௌதமரே பிராமணர்கள் எப்பொழுதும் உயர்ந்த வர்கள்கள்தான்" அஸ்ஸலாயன மீண்டும் தர்க்கிக்கத் தொடங்கினார்.

"நல்லது அஸ்ஸலாயன, உயிர்க்கொலையில் ஈடுபடுகின்ற, புறங்கூறுகின்ற, அடுத்தவர்களோடு குரோதம் பாராட்டுகின்ற உயர் குலத்தோர் மரணத்தின் பின்னர் எங்கே பிறப்பார்கள்?"

"கௌதமரே பாவம் செய்பவர்கள் கெட்டவிதமாகத் தான் பிறப்பார்கள். அவர்கள் பிறந்த குலம் அதைப் பாதிப்பதில்லை" அஸ்ஸலாயன பதிலாகக் காரணங்களை முன்வைத்தனர்.

கௌதம புத்தர் அதையிட்டுக் கேள்வி எழுப்பினார்.

"அப்படியென்றால் அஸ்ஸலாயன நீங்கள் பிராமணர்கள் உயர்வான வர்கள் என்றும் அவர்ள் பிரமனின் புத்திரர்களென்றும் சொல்வது எவ்வாறு?"

"நீங்கள் என்னதான் சொன்னாலும் எனது தர்க்கம் பிராமணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வானவர்கள்தான்" அஸ்ஸலாயன தோல்வியான வாதமொன்றைக் கட்டியெழுப்பினான்.

"அப்படியென்றால் நன்மை செய்ய முடிவது பிராமணர்களுக்கு மட்டுமா? தாழ்குலத்தவர்களுக்கு நன்மை செய்ய முடியாதா?"- கௌதமர் மீண்டும் கேட்டார்.

"கௌதமரே, தாழ்குலத்தைச் சார்ந்தவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் உயர்குலத்தில் பிறப்பெடுக்க முடியும்" அஸ்ஸலாயன பதிலிறுத்தார்.

"அஸ்ஸலாயன, அவ்வாறெனில் நீங்கள் முன்வைக்கும் விடயங்களின் ஏற்புடைமை என்ன? ஆற்றில் இறங்கி குளித்துச் சுத்தமடைய பிராமணராகவே, இருக்க வேண்டுமா? தாழ்குலத்தவர்களுக்கு அவ்வாறு செய்யமுடியாதா? அப்படியிருக்கும்போது நீங்கள் பழக்கப்பட்ட கருத்திலேயே நிற்பதேன்? நான் உங்களுக்கு இன்னொரு உதாரணம் முன்வைக்கிறேன்"

"சத்திரியர் குல அரசனொருவன் பிராமணரையோ சத்திரிய தாழ்சாதி ஒருவனையோ அழைத்து சந்தனம் அல்லது அதுபோல் பெறுமதியான மரக்குற்றிகளை சேர்த்து தீமூட்டுவர். அது நன்றாக எரிய ஆரம்பிக்கிறது. அதேபோல் அரசனின் நாய்கள் மலசலம் கழித்த மரக்குற்றிகளையோ, வண்ணான் துணி துவைக்கும் பெறுமதியற்ற மரத்தண்டுகளைக் கொண்டு தீ மூட்டுவர். இந்த நெருப்புக்களிடையே வேறுபாடுண்டா?" என்று புத்தர்பெருமான் கேட்டார்.

"இல்லை கௌதமரே, இரண்டும் ஒரே மாதிரித்தான்" அஸ்ஸலாயன பதில் சொன்னார்.

"உமது தாய்மார் மகாபிரமனுடன் ஒன்றாக இருந்ததாக நீர் நம்புகிறீரா?"

"இல்லை கௌதமரே"

"உமது ஏழு பரம்பரையிலுமிருந்த தந்தைமார் பிராமணப் பெண்களுடன் மட்டுமே கூடியதாக நம்புகிறீரா?"- புத்தபெருமான் மீண்டும் கேட்டு நின்றார்.

"இல்லை கௌதமரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் உங்கள் வாதத்தில் எந்த அடிப்படையுமில்லையே அஸ்ஸலான?" புத்தர் பெருமான் முடித்துவைத்துக் கேட்டார்.

அஸ்ஸலான தனது வாதத்தில் தோல்வியுற்றதை ஏற்றுக் கொண்டார்.

## *விவரணம்*

1. குலவாதம் அடிப்படையற்றதென்பதை உறுதிப்படுத்த புத்தர்பெருமான் பயன்படுத்திய கற்பித்தல் முறை யாது?

2. இலங்கையில் மக்கள் பாகுபாட்டை குறைப்பதற்கு இக்கதை எவ்வகையில் ஏற்புடையது?

3. சமத்துவத்தையும் சமூகநீதியையும் நலைநாட்டுவதற்காக சமூக விழிப்புணர்வாளருக்கோ ஆசிரியருக்கோ உள்ள பொறுப்புணர்வை புத்தரின் பாத்திரத்திற்கூடாக நீர் எவ்வாறு விளங்கிக் கொள்கிறீர்?

## *வலியுறுத்தல்*

✪ நீதி, அன்பு, வழிபாடு போன்ற விதிமுறைகளை விட அவசியமானவற்றை தவிர்த்து விடுகிறீர்கள். குருட்டு உபதேசகர்களே! நீங்கள் ஈயை விரட்டிவிட்டு ஒட்டகத்தை விழுங்குபவர்கள்.

புனித பைபிள்
யேசுநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. நல்ல இடையனும் குழப்படிகார செம்மறியாடும்

இடையன் தனது செம்மறி ஆட்டுப்பட்டியை புல் மேய்ந்து உண்பதற்காக புற்தரையை நோக்கி இட்டுச்செல்வதில் முழுநாளையும் கடத்தினான். இருள்படர்ந்து வரும்போது அவன் தனது ஆடுகளை திரும்பவம் எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டான்.

இடையனுக்கு செம்மறிக்கூட்டத்தில் எத்தனை உருப்படிகளென்று ஞாபகமில்லாதபோதும், ஒவ்வொரு ஆட்டைப் பற்றியும் ஞாபகமிருந்தது. அவை முழுநாளும் புல்சாப்பிட்டுக் கழித்தாலும் ஒவ்வொன்றையும் மிகுந்த கவனத்தோடு கவனிக்கப் பழகியிருந்தான். அவை பிறந்தது முதல் கண்பார்வையில்தான் வளர்ந்துவந்தன. அவை இடையனின் குரல்கேட்கும் சுற்றாடலிலேயே சஞ்சரித்தன. அதனால் பார்வையில் ஒன்று போலிருந்தாலும் அவற்றைத் தனித்தனியாக அறிந்து இனம் காணும் மோப்ப சக்தியொன்று இடையனிடம் காணப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையானபோது அவற்றை அடைப்பதற்காக ஒவ்வொன்றாக அனுப்பும்போது ஒன்று குறைவென்பதை அவன் மோப்பம் பிடித்துவிட்டான். அது கொஞ்சம் குழப்படிதான். அதனால்தான் அது அந்தக் கூட்டத்தில் சிறப்பாகத் தெரிந்தது. மந்தைகளை புற்றரைக்கு இட்டுச் செல்கையில் அது தனது கட்டளையை கவனத்திலெடுக்காது அங்குமிங்கும் ஓடப் பார்க்கும். ஆனால் இன்று அது இல்லை.

குழப்படிக்காரன் எங்குதான் இடம்மாறியிருக்கும்? அதன் குழப்படிக் குணத்தால் அது தனது கண்களை ஏமாற்றி எப்படியாவது இடம்மாறியிருக்கும். இருந்தாலும் மீண்டும் அது அடைக்கப்படும் இடத்தை எப்படித் தேடிக்கொள்ளும்?

செம்மறி ஆடுகளுக்கு அடுத்த மிருகங்களைப் போல் மோப்பத்தின் மூலம் பாதைதேடும் ஆற்றல் கிடையாது. அதனால் அது காட்டில் கட்டாக்காலியாகிவிடும். அப்படி நடந்தால் அதன் தலைவிதி என்ன? தனிமையில் பாலைநிலத்தில் அங்குமிங்கும் அலையும்போது அது நிச்சயமாக ஓநாய் ஒன்றுக்கு அல்லது வேறொரு மிருகத்திற்கோ இரையாகிவிடுவது உறுதி. அப்படியாக யோசித்த இடையனுக்குள் குழப்படிக்காரனைப் பற்றித் துக்கம் ஏற்பட்டது.

இடையன் தனது செம்மறிகளையெல்லாம் அடைப்பகத்தில் சேர்ப்பித்துவிட்டு, மீண்டும் புற்றரையை நோக்கி ஓடினான். அதற்குப் பழக்கப்பட்ட குரலில் அழைத்தான். இரவிருட்டும் பிரவகித்து வந்ததினால் கண்வெளிச்சத்தில் செம்மறி ஆட்டைத் தேடுவது சிரமமாகிவிட்டது. இருந்தும் இறுதியில் தனித்துப் போன செம்மறி ஆடு இடையனைக் கண்டுகொண்டது. அந்நேரமாகும் போது செம்மறி ஆடு சத்தமிட்டுக் களைத்துப் போயிருந்தது. இடையனுக்கு குழப்படிக்காரனையிட்டுக் கவலையேற்பட்டது. கூடவே காணாமல் போன தனது ஆட்டைத் தேடிக்கொள்ள முடிந்ததையிட்டு, அப்பாவிச் சிரிப்பால் இடையனின் மனம் நிறைந்திருந்தது.

இடையன் களைத்துப்போன ஆட்டுக்குட்டியைத் தூக்கிக் கழுத்தில் வைத்துக் கொண்டு மீண்டும் பண்ணையை நோக்கிச் செல்ல மகிழ்வுடன் தயாரானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *விவரணம்*

1. உமது வகுப்பறையில் உங்கள் இலக்குக் குழுவிடையே காணாமல் போன செம்மறி ஆட்டைப்பற்றி ஞாபகமூட்ட முடியுமா?

2. இடையன், காணாமல்போன செம்மறியை தேடிச்செல்வது அதுபற்றி எவ்வாறான புரிந்துணர்வும் எவ்வாறான சிந்தனையும்....

3. நல்ல இடையனுக்கூடாக உங்கள் விழிப்புணர்வாளர், ஆசிரியர்கள் எவ்வாறான பின்புலத்தை ஒளியேற்றிக்கொள்வது எப்படி?

### *வலியுறுத்தல்*

✪ எல்லா உயிரினங்களும் இறைவனின் குழந்தைகளே. இறைவனின் குழந்தைகளுக்கு நெருக்கமானவனே இறைவனுக்கு நெருக்கமானவனாவான்.

அல்ஹதீஸ்
முகம்மது நபிகள் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. வெற்றிக் கம்பம்

**கா**ட்டு மிருகங்களில் வேகமாக ஓடக் கூடியது முயல். அதனால் தன்னைப் பற்றிய உயர்ந்த மதிப்பீட்டோடுதான் முயல் எப்பொழுதுமே கதைக்கும், நடந்து கொள்ளும். அதனால் தன்னோடு ஓட்டப்பந்தயத்திற்கு வருமாறு அது அடுத்த மிருகங்களுக்கு எப்போதும் சவால்விடும்.

முயலோடு ஓடி வெற்றிபெற முடியாதென்று தெரிந்தால் அடுத்த மிருகங்கள் சவாலை ஏற்றுக்கொள்ளாமல் பின்வாங்கி நின்றவேளையில், எப்பொழுதுமே மெல்லவே நடந்து செல்லும் ஆமை அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டது. எல்லா மிருகங்களும் ஆமையைப் பார்த்து நையாண்டியாகச் சிரித்துக் கொண்டன. இருந்தும் முயலாரைத் தோற்கடிப்பதாக ஆமை திடசங்கற்பம் செய்துகொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல், ஆமை இருவருக்குமிடையே போட்டி நடாத்துவதற்கான நாள் தீர்மானிக்கப்பட்டது. இடமும் தெரிவு செய்யப்பட்டது.

குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் போட்டி ஆரம்பமாகியது. போட்டி தொடங்கும் இடத்திலும் முடிவுறும் இடத்திலும் ஏனைய மிருகங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தன.

போட்டிக்கான ஆரம்ப சமிக்ஞை விடுக்கப்பட்டதும் முயல் மின்னல் வேகத்தில் ஓடத்தொடங்கியது. ஆமை வழமையான தனது வேகத்தில் மெல்ல மெல்ல முன்நோக்கிச் சென்றது.

வேகமாக ஓடிச்சென்ற ஆமை திரும்பிப் பார்த்தபோது ஆமை காணக்கூடிய தூரத்தில் கூட இருக்கவில்லை. ஆமைக்கு பகிடிவிடுமாப் போல் பற்றைக்கடியில் தூங்கிவிடவேண்டுமென்று முயல் எண்ணியது. போட்டி முடிவில், ஆமை வரும்வரையில் தான் தூங்கிக் கொண்டிருந்ததாக அது சொல்ல முடியுமென்று நினைத்தது. அதன்படி முயல் பற்றையொன்றுக்கடியில் தூங்கியது. சற்றுநேரத்தில் அது கடுந்தூக்கத் தில் ஆழ்ந்துவிட்டது.

தன்னால் எந்தவகையிலும் வெற்றிகொள்ள முடியாதென்று தெரிந்தே போட்டிச் சவாலை ஏற்றமை தான் செய்த மடத்தனமென்று ஓடிக்கொண்டி ருக்கும் போது ஆமை யோசித்தது. திடசங்கற்பத்தைக் கைவிடாது முன்னோக்கிச் செல்வதென் ஆமை உறுதிசெய்து கொண்டது.

நீண்டநேரமாக ஓடிய ஆமைக்கு தூரத்தே வெற்றிக் கம்பம் தெரியத் தொடங்கியது. அதனருகே நின்று விலங்குகளெல்லாம் உற்சாகத்தோடு ஆமையைப் பார்த்துக் கொண்டிருந்தன. முயல் ஓடிய ஓட்டத்திற்கு இந்நேரம் வெற்றிக் கம்பத்தைத் தாண்டியிருக்க வேண்டுமாயினும், முயல் வெற்றிக் கம்பத்தை நெருங்கியிருப்பதாகத் தெரியவில்லை. மென்மேலும் மனதைத் தைரியப்படுத்திக் கொண்ட ஆமை, களைப்புப் பாராமல் உச்ச வேகத்தில் வெற்றிக் கம்பத்தை நோக்கிச்சென்றது.

பற்றைக்கடியில் தூக்கத்தில் ஆழ்ந்த முயல் தனது வெற்றியைக் கனவில் கூடக் கண்டது. வெற்றிக் கம்பத்தின் அருகில் கூடியிருந்த சகபாடிகள் ஆமையை உற்சாகமூட்டியபடி வெற்றி ஆரவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විටත් ඉබ්බා ඉබි ගමණින් ගමන් කොට දිණුම් කණුව පසුකර ජයග්‍රහණය ලබා තිබුණේය.

## ඉඟිවැල

1. මේ කථාවේ එන හාවා සහ ඉබ්බා විසින් මානව සමාජ නියෝජනය කරන්නේ කිනම් අයුරකින්ද?
2. ඉබ්බාගේ ජයග්‍රහණයට හේතු සාධක වූ ගුණය කුමක්ද?
3. ආන්තික ප්‍රජාව හෝ පසුබට දරුවන් ජයග්‍රහණය කිරීම සඳහා මේ කථාවෙන් සපයාදිය හැකි ආලෝකය කුමක්ද?

## අත්වැල

මිනිසාගේ යහපැවැත්මේ පළමු සාධකය නම් තිර අධිෂ්ඨානය සහ හිත්මීමය. එසේ ම ඔහුගේ දූෂිත වීමට මූලිකව ම බලපාන්නේ මසුරු කම හා නිශ්ඵල අපේක්ෂා ය.

මහම්මත් නබිනායක තුමා
ශුද්ධ වූ හදීස් ග්‍රන්ථ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. கல்லெறிந்தவனுக்கு பரிசாக மாங்காய்

இந்தத் துறவியொருவர் தர்மபோதம் செய்து கொண்டிருந்தார். தர்மபோதனையை குழப்பிவிடுவதற்கு யோசித்த ஒருவன் துறவியின் மீது கல்லெறிந்தான்

தமக்கு அறப் போதனை புரிந்து கொண்டிருந்த துறவிக்கு கல்லெறிந்தவன் மீது கோபமுற்ற குழுமிநின்றோர் அவன் பின்னால் விரட்டத் தொடங்கினர். தப்பியோடிக் கொண்டிருந்த குழப்பகாரனை விரட்டிப் பிடித்த அவர்கள் அவனை துறவியின முன் கொண்டுவந்து அமரச் செய்தனர்.

தனக்குக் கல்லெறிந்தவனை கருணையோடு பார்த்த துறவியார், அவனுக்கு தன்வசமிருந்த மாங்காய் ஒன்றைக் கொடுத்தார். துறவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததைப் பார்த்து அவர்கள் ஆச்சரியமடைந்தனர். தனக்கு அடித்தவனுக்கு தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக மாங்காய் ஒன்றைப் பரிசாகக் கொடுத்ததற்கு என்ன காரணமொன்று வினவி நின்றனர்.

"இவன் அந்தக் கல்லால் மாமரமொன்றுக்க எறிந்திருந்தால் குறைந்தபட்சம் சில மாங்காய்கள் கிடைக்குமல்லவா? ஆனால் எனக்கு கல்லால் அடித்தால் நான் என்னதான் கொடுக்க? அதனால்தான் மாங்காய் ஒன்றையாவது கொடுக்க யோசித்தேன்" மிக அமைதியான நிலையில் துறவியார் இவ்வாறு கூறினார்.

### *விவரணம்*

1. இந்துத் துறவி தனக்கு அடித்தவனின் மனதைத் தன் பக்கம் திருப்பிக் கொள்ள பிரயோகித்த உபாயத்தை நீர் எவ்வாறு மதிப்பிடுகிறீர்?

2. தனக்கு எதிராக எழுந்த ஒருவனை, மேற்குறித்த விதமாக நடந்து கொள்வதற்கு இந்துத் துறவியார் தனக்குள் வளர்த்துக் கொண்டிருந்த பண்பு எது?

3. மாங்காயொன்றை இந்துத் துறவியிடம் பரிசாகப் பெற்றுக் கொண்ட குழப்படி காரனுக்குள் எத்தகைய மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்?

### *வலியுறுத்தல்*

✪ சாதாரண பூக்களின் நறுமணமோ, சந்தனம் தடவிய பூக்களின் மணமோ காற்றோடு கலந்து பரவிச் செல்லாது. ஆனால் நன்மக்களின் சீலம் காற்றோடு கலந்து நாற்பக்கமும் பரவும்.

தம்மபதம்

கௌதம புத்தர்பெருமான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. கடவுளை வேண்டுதல்

இராமாயாணத்தில் நாம் சந்திக்கக்கூடிய இராமனை இந்து பக்தர்கள் விஷ்ணு கடவுளின் பத்து அவதாரங்களில் ஒன்றாகவே கருதுகின்றனர்.

ஒருநாள் இராமன் அம்பு, வில் சகிதம் வேட்டைக்குப் புறப்பட்டான். விலங்கொன்றுக்கு எறிவதற்கு உறையிலிருந்து அம்பொன்றை வெளியெடுத்தபோது அங்கு நின்ற தவளையொன்றைக் கண்டான். அப்பாவித் தவளையொன்று தன்னால் துன்பத்திற்குள்ளாகியிருப்பதைக் கண்டு வெதும்பினான் இராமன்.

"ஏன் நீ முன்பு சத்தமிடவில்லை?" என்று கேட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்பாலானவர்கள் தமக்கு ஆபத்தொன்று ஏற்பட்டால் உதவி கேட்டது உங்களிடம்தான். அப்படியிருக்க நீங்கள் இன்னொரு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த தயாராகும்போது நான் யாரிடம் உதவிகோருவது?" தவளையின் பதில் இவ்வாறு அமைந்தது.

## *விவரணம்*

1. இராமனுக்கு தவளை மூலம் முன்வைக்கப்பட்ட சத்தியம் யாது?

2. தவளை மீது ஏற்பட்ட அனுதாபம், தனது இலக்கிற்குள்ளான மிருகத்தின் மீது ஏற்படாமையை எமது அன்றாட வாழ்வோடு பொருத்திப் பார்க்க முடியுமா?

3. இக்கதை எமது வாழ்க்கைக்கு விடுக்கும் சவால் யாது?

## *வலியுறுத்தல்*

✪ ஒருவன் பயமின்றி விலங்குகளை வதைப்பதையும் வதைக்க உதவுவதையும் கைவிடும் பொழுது அவன் துறவியாகுவான்.

தம்மபதம்
கௌதம புத்தர் பெருமான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. கூராயுதமும் புஷ்பமும்

ஒரு கூட்டில் இரண்டு கிளிக்குஞ்சுகள் பிறந்தன. முட்டையிலிருந்து வெளியேவந்து கால்கள், சிறகுகளெல்லாம் வலிமையடைவதற்குமுன்பு, கூடு இருந்த சூழலில் பெரும் புயலொன்று வீசியது. புயலின் வேகத்தினால் கிளிக்கூடு அடித்துச் செல்லப்பட்டு இரு குஞ்சுகளும் இருவேறு பக்கமாகச் சென்றன.

ஒரு குஞ்சு அடித்துச் செல்லப்பட்டு கள்ளர் கூட்டமொன்றுக்குச் சொந்தமான நிலப்பகுதியில் ஆயுதக் குவியலின் மீது விழுந்தது. அது ஐநூறு கள்ளர்கள் வாழும் ராஜதானியாகும். கள்வர் கூட்டம் கிளிக்குஞ்சுக்கு 'கூராயுதம்' என்று பெயர்சூட்டி பாதுகாத்தது.

அடுத்த கிளிக்குஞ்சு துறவிகள் ஐநூறுபேர் வாழும் துறவிகள்புரத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வெளியில் மலர்ந்திருந்த பூந்தோப்பின் மீது விழுந்தது. துறவிகள் இந்தக் குஞ்சை மலர்களுக்கு மத்தியிலிருந்து கண்டெடுத்ததால் 'புஷ்பம்' என்று பெயரிட்டனர்.

கூராயுதக் கிளிக்குஞ்சு கள்வர்கள் மத்தியில் அவர்களது செயற்புலத்தைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் வளர்ந்ததோடு, புஷ்பக் கிளிக்குஞ்சு துறவிகள்பதியில் துறவிகளின் செயற்பாடுகளை பார்த்தும் கேட்டும் வளர்ந்துவந்தது.

ஒருநாள் அந்த நாட்டின் பஞ்சால அரசன் வேட்டைக்குச் சென்று களைப்படைந்து, கூராயுதக் கிளிக்குஞ்சு வாழ்ந்த கிராமத்திற்கூடாகவே வந்தான். தாங்கிக் கொள்ள இயலாதளவு களைப்படைந்திருந்த அரசன் ஒரு மரத்தடியில் சாய்ந் நித்திரையாகிவிட்டான்.

அரசனையும் அவனது ஆபரணங்களையும் கண்ணுற்ற கூராயுதக் களி, எப்படியாவது அரசனைக் கொன்று ஆபரணங்களை எடுத்துக் கொள்ள யோசித்தது. உடனே சமையலறைப் பக்கம் சிறகடித்துச் சென்று பதிகொலப என்ற திருடனைச் சந்தித்து விடயத்தைக் கூறியது. உற்சாகமடைந்த அத்திருடன் வந்து அரசனை நன்கு அவதானித்தான். நித்திரையில் ஆழ்ந்திருப்பது அரசன் என்பதை அத்திருடன் அறிந்துகொண்டான்.

"கூராயுதம் உனக்குப் பைதியம்? இது ஒரு அரசனல்லவா? அரசனொருவன் அரச ஆபரண அலங்காரங்களோடு இருக்கவேண்டுமென்று உனக்குப் புரியாதா? அதனால் அவரை நெருங்கக்கூட நினைக்காதே"

திருடனை தன் கருத்துக்கு இசைவாக்கிக் கொள்ள இயலாமல்போன கூராயுதக்கிளி அவனைத் திட்டித் தீர்க்கத் தொடங்கியது.

கிளியினதும் திருடனதும் வாக்குவாதம் அரை நித்திரையிலிருந்த அரசனுக்கு விளங்கியது. தனக்கு ஆபத்து வரப்போவதை விளங்கிக் கொண்ட அரசன் காலதாமதமின்றி அங்கிருந்து வெளியேறினான்.

அரசனுக்குத் தப்பிச்செல்ல இடமளித்ததால் கோபமுற்ற கூராயுதக்கிளி நழுவிச் சென்றிருந்த திருடர்களை திட்டத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிவரும் பொழுது அரசன் துறவிகள் தங்குமிடத்தருகால்தான் வந்தான். அப்பொழுது துறவிகள் தமதுணவுக்காக காய்கறி பழங்கள் பறிப்பதற்காக வனப்பகுதியை அடைந்திருந்தனர். துறவிகள் தங்குமிடத்தில் புஷ்பக்கிளி மாத்திரமே வீற்றிருந்தது.

அரசன் தனது ஆச்சிரமத்தை நோக்கி வருவதைக் கண்ணுற்ற புஷ்பக்கிளி, மிகவும் அன்பு வார்த்தைகள் கூறி வரவேற்று, தமதிருப்பிலிருந்த தேன், பழங்கள் போன்றவற்றை சாப்பிடுமாறு உபசரித்தது. அரசனும் புஷ்பக்கிளியின் அன்பு வார்த்தைகளால் நிம்மதியான மனதோடு அங்கு தங்கி களைப்பகற்றிக் கொண்டான்.

மீண்டும் தனது மாளிகைக்குச் சென்ற அரசன், தனது மந்திரி-பிரதானிகளை அழைத்து, இதன் பின்னர் எவரும் கிளிகளைக் கொல்ல இடமளிக்கக் கூடாதென்றும் அவற்றுக்கு அபயமளிக்க நாட்டு மக்கள் முற்பட வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தார்.

## *விவரணம்*

1. ஒரு தாயின் இருபிள்ளைகள் எதிர்காலத்தில் முற்றிலும் வித்தியாசப்பட்டவர்களாக மாறியமைக்கு அமைவான காரணி யாது?

2. ஒருவருக்குள் சுமுகமான ஆளுமையை உருவாக்க, நாம் கவனம் செலுத்தவேண்டிய விடயம் என்ன?

3. சமூக விழிப்புணர்வு, மதிப்பிடல் காரியங்களில் ஈடுபடுபவர்களுக்கு இக்கதை காட்டும் வழிமுறை என்ன?

## *வலியுறுத்தல்*

✪ மன ஒருமைப்பாடு இல்லாதபோது ஞானம் தூரமாகிவிடும். அப்படி இருக்கும்போது மனம் எப்படி அமைதி அடையும்? நீர் சமாதானம் பற்றி அறியாதபோது எப்படி அதை அனுபவிக்க முடியும்?

பகவத்கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. தங்க முட்டை

ஒரு விவசாயி விசேட வகையான கோழியொன்றை வளர்க்கத் தொடங்கினான். அது ஒரு தங்கக் கோழி. உரிய வயதை அடைந்த அக்கோழி முட்டையிட ஆரம்பித்தது. விசேடமென்னவென்றால் அது போடும் முட்டைகள் தங்கமுட்டைகளாகவிருந்தன.

பண்ணைச் சொந்தக்காரன் அந்தக கோழி இடும் முட்டைகளை விற்று அதிக பணம் சம்பாதிக்க ஆரம்பித்தான். இருந்தும் சில நாட்களில் விவசாயி கவலைக்குள்ளானான். அந்தக் கோழி நாளாந்தம் ஒரேயொரு முட்டையிடுவதுதான் அவரது கவலைக்குக் காரணம்.

கோழி தன்வயிற்றில் நிறைய முட்டைகளை வைத்துக்கொண்டு, தினம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முட்டையை மட்டுடே இடுகிறதென்ற எண்ணம் விவசாயியின் மனதுக்குள் புகுந்ததனால் அவனுக்கு கோழியின் மீது கோபமேற்பட்டது.

தங்கமுட்டை விற்பதால் தினாந்திரம் பணம் பொங்கிவருவதால் பெரும் கற்பனைகளை வளர்த்துக் கொண்ட விவசாயி ஒருநாள் தங்கமுட்டைகள் அனைத்தையும் ஒரேயடியாக விற்று விரைவாக பெரும் செல்வந்தராக வர எண்ணினான். விவசாயி கோழியை கொன்றுவிட்ட போதும் அதன் வயிற்றிலிருந்து ஒரு முட்டையைக் கூடத் தேடிக் கொள்ள முடியவில்லை. தான் செய்த மடத்தனம் விவசாயிக்கு பின்னர்தான் தெரியவந்தது.

***விவரணம்***

1. விவசாயி தங்கக் கோழியின் வயிற்றைப் பிளப்பதற்கு சமமான நிகழ்வொன்றை ஞாபகமூட்ட முடியுமா?

2. கதாசிரியர் இக்கதைக்கூடாக எத்தகைய மனிதப் பலவீனத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார்?

3. உங்களிடம் கல்விகற்கும் மாணவரோ பயிற்சி பெறும் மக்களோ புதுவாழ்வுக்காக இக்கதையை எப்படிப் பிரயோகிக்கலாம்?

***வலியுறுத்தல்***

✪ மனிதன் அவனது நம்பிக்கையின் அடிப்படையிலே வடிவமைக்கப்படுகிறான். அவன் எதனை விசுவாசிக்கிறானோ, அவனது சுபாவமும் அதேயாகும்.

பகவத் கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 25. வீண்விரயம் செய்யும் புத்திரன்

ஒரு தந்தைக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தனர். மூத்தவன் தந்தைக்கு அடிபணிந்து வாழ்ந்ததோடு, இளையவன் மரியாதை வழங்காதவனாக நடந்துகொள்ள பழகியிருந்தான்.

"அப்பா, உங்களது சொத்துக்களில் எனக்குரியதை தந்துவிடுங்கள்" என்று ஒருநாள் இளையவ் தந்தையை நெருங்கிச் சொன்னான்.

மகனின் மனதை மாற்ற எடுத்த முயற்சி வெற்றியளிக்காததால் தனது சொத்துக்களில் அரைவாசியை இளைய மகனுக்கு எழுதிக் கொடுத்தார்.

இளையவன் தனக்குக் கிடைத்ததை எல்லாம் எடுத்துக் கொண்டு வெளிநாடொன்றுக்குச் சென்று மோசமான பழக்கவழக்கங்களோடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைக் கடத்தினான். சிறிது காலத்தில் அவனிடமிருந்த பணம் முடிந்துவிட்டது. உண்ணக் குடிக்கக்கூட வழியில்லாமல் இறுதியில் கைநீட்டி வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான்.

ஒருவரிடம்போய் சாப்பாட்டுக்காகப் பிச்சை கேட்டபோது, அவனுக்கு தனது விவசாயப் பண்ணையில் பன்றிகளைப் பார்த்துக்கொள்ளப் பணித்தான். பன்றிக்குக் கொடுக்கும் தானியங்களாலாவது பசியைப் போக்கிக் கொள்ளும் நோக்கில் இளையவன் அதற்கிணங்கினான்.

இதற்கிடையில் அவனுக்கொரு யோசனை ஏற்பட்டது. அவனுக்கு தனது தந்தை சார்ந்தவர்களது வளவாழ்வு ஞாபகம் வந்தது. அவர்கள் அனைவரும் தன்னைவிட சிறப்பாக உண்டு குடித்து வாழும் விதத்தை கற்பனை செய்தான்.

தான் பசிநெருப்பில் கவலை மிகுந்து காலம் கடத்துவதைவிட மீண்டும் தந்தையிடம் சென்று "நான் மீண்டும் தங்களது மகனாக இருக்க தகுதியற்றவன். ஆனாலும் உங்கள் கூலிக்காரனா இருக்க இடமளியுங் கள்" என்று கேட்டுநிற்க எண்ணி மீண்டும் தனது வீடு நோக்கிச் சென்றான்.

தன்னைவிட்டுச் சென்ற மகன் திரும்பவும் தன்னைத் தேடி வருவதைக் கண்ட தகப்பன் ஓடிச்சென்று மகனை அணைத்து வரவேற்றார். தகப்பனின் காலடியில் விழுந்த இளையவன், "ஐயோ அப்பா ஒரு மகனாகக் கவனிப்புப் பெற நான் தகுதியற்றவன். இருந்தாலும் அப்பாவின் கூலிக்காரன் போலிருக்க எனக்கு இடமளியுங்கள்" என்று வேண்டினான்.

தனது மகன் வந்துசேர்ந்த மகிழ்ச்சியால் உற்சாகமடைந்த தகப்பன் தனது சேவகர்களை அழைத்து மகனுக்கு புத்தாடை, புதுக்காலணி பெற்றுக் கொடுக்குமாறு அறிவித்தான். அதேபோன்று சாப்பிட்டு மகிழ்ச்சியடைய சுவையான உணவு ஏற்பாடு செய்யுமாறும் வேலைக்காரருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

விவசாயப் பண்ணையை மேற்பார்வை செய்வதற்காகச் சென்றிருந்த மூத்தவன் மாலைவேளையில் வீட்டுக்கு வரும்போது வீடு விழாக்கோலம் பூண்டிருந்ததைக் கண்டு வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் உள்ளானான். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்திற்கு என்ன காரணமென்று தனது வேலையாளிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட மூத்தமகன் கோபத்திற்குள்ளானான்.

"நான் இவ்வளவு காலமும் உங்கள் சொல்லுக்கு அடிபணிந்து வாழ்ந்தேன். இருந்தும் நீங்கள் ஒருநாளும் நண்பர்களோடு சங்கமிக்க இடந்தரவில்லை. சொத்துக்களைப் பங்குபோட்டுக் கொண்டு சென்று அநியாயம் செய்தவனுக்கு இத்தகைய ஆதரவு எதற்கு? அடித்து விரட்ட வேண்டியதுதானே?"

தகப்பன் தனது மூத்தமகனின் பேச்சை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு.....

"பெரியவன் நீ எப்பொழுதும் என் சொற்படி நின்றாய். அதனால் எனக்குச் சொந்தமாக இருக்கும் அனைத்தும் உனக்கே உரிமை. உனது தம்பி இறந்து போய்விட்டாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இல்லாமல் போயிருந்தாலும் திரும்பக் கிடைத்துவிட்டான். அதனால் நாங்கள் உண்டு குடித்து சந்தோஷமாக இருப்போம்" என்றார்.

### *விவரணம்*

1. வீண்விரயப் புத்திரன் எக்காரணத்தினால் மன்னிப்பு வழங்கத் தகுதி பெறுகிறான்?
2. வீண்விரயப் புத்திரன் வெளியேறிச் சென்றதை, நீங்கள் பெற்ற எந்தத் தொழில் அனுபவத்தோடு பொருத்த முடியும்?
3. ஆசிரியர்களும் சமூக விழிப்பூட்டுநர்களும் இந்தத் தந்தையிடமிருந்து பெறக்கூடிய முன்மாதிரி என்ன?

### *வலியுறுத்தல்*

✪ அடுத்தவர்களின் மகிழ்ச்சியையும் வேதனையையும் தனதாகக் கருதி செயற்படுபவன், உயர்ந்த ஆன்மீக நிலையை கைப்பற்றிக் கொண்டவனாவான்.

பகவத்கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. விதைத்த வித்து

ஒரு விவசாயி மழைகாலம் ஆரம்பித்ததும் பாதுகாப்பாக வைத்திருந்த விதைகளை விதைப்பதற்காக வெளிக்கிட்டான்.

அவற்றை விதைப்பதற்காகக் கொண்டுசெல்லும் போது சில விதைகள் பிரதான பாதையில் விழுந்தன. அவை பாதையில் போய்வரும் மனிதர்களின் பாதங்களில் மிதிபட்டதோடு, அதைக் கண்ட குருவிகள் அவற்றைப் பொறுக்கி உண்டன.

விவசாய நிலத்தில் சில இடங்களில் வெளிப்பட்டு நின்ற கற்களின் மீதும் விதைகள் விழுந்தன. இருந்தும் நீர் கிட்டாமையால் அவை காய்ந்து பயனற்றுப் போயின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைக்கும்போது சில வித்துக்கள் முட்செடிக்கிடையே விழுந்தன. அவை முளைத்து வளர்வதோடு அவற்றைப் பின்தள்ளிக் கொண்டு முட்செடி எழுந்து மீண்டும் விதைச்செடிகள் நல்ல பருவத்தில் அழிந்து போயின.

செழிப்பான நிலத்தில் விழுந்த வித்துக்கள் மதாளித்து வளர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட அறுவடையைப் பெற்றுக்கொடுத்தது.

### *விவரணம்*

1. இக்கதையில் விதைப்பாளனை ஆசிரியராகவோ சமூக விழிப்புணர்வாளனாகவோ கற்பனை செய்தால் பாதையில், கற்பரப்பில், முட்புதரில், செழிப்பான பூமியில் விழுந்த விதைகளை எதற்கு உவமிக்கலாம்.

2. பின்தங்கிய மக்களின் பிள்ளைகளுக்கு கற்பித்தலின் பலன் சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்காக ஊக்கமூட்ட இக்கதை தரும் பக்கபலம் யாது?

3. ஆசிரியருக்கு தனது செயற்புலத்தை விளங்கிக் கொள்வதற்காக இக்கதை தரும் அழுத்தமென்ன?

### *வலியுறுத்தல்*

✪ அன்பின் மூலம் நான் அவர்களின் அறியாமை எனும் இருளை அகற்றுகிறேன். அவர்களுக்குள் ஞானஒளியை ஏற்றுகிறேன்.

பகவத்கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரே.....

உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் பேய்க்குஞ்சுகளாகத் தெரிந்தால்,
பிள்ளைகளுக்கு நீங்கள் பேய்களாகவே தெரிவீர்கள்.

உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் காய்ந்து போன செடியாகத்
தெரிந்தால், பிள்ளைகளுக்கு நீங்கள் இற்றுப்போன மரமாகவே
தெரிவீர்கள்.

உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் மகனாகவோ மகளாகவோ
தெரிந்தால், பிள்ளைகளுக்கு நீங்கள் தாயாகவோ தந்தையாகவே
தெரிவீர்கள்.

உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் செழிப்பான வித்தாகத் தெரிந்தால்,
பிள்ளைகளுக்கு நீங்கள் பெரும்பயன்தரும் விருட்சமாகவே தெரிவீர்கள்.

உங்களுக்கு உங்கள் பிள்ளைகள் சிறிய நீரூற்றாகத் தெரிந்தால்,
பிள்ளைகளுக்கு நீங்கள் மகா கங்கையாகத் தெரிவீர்கள்.

**சிட்னி மாகஸ் டயஸ்**
**நன்றி: 'சிதுவினி சியபத'**
**(சிந்தனைச் சுவடிகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வுக்கான அறிவு









நல்வாழ்வுக்கான, புதுவாழ்வுக்கான, சகவாழ்வுக்கான, நல்லாட்சிக்கான அறிவு, என்ற வரிசையிலான மேற்படி நான்கு நூல்களின் மூலம் முன் வைக்கப்படுவது யாதெனில், இன்று நாகரீகமான மனித சமூகமொன்றை உருவாக்கத் தேவையான சிந்தனை வழியிலான, ஆன்மீக ரீதியிலான, கலாசார ரீதியான, உருவாக்கப்பட வேண்டிய புதிய புத்தாக்கங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்துவதில், மனித இனத்தின் மானுட....சமய... இலக்கிய பலத்தினுள்.. பிணைந்துள்ள பொது...அகில...மனித சிந்தனைக் கோலங்களும்...பிரயோகங்களும், தற்கால இலங்கைச் சமூகத்தின் சவால்களை வெற்றி கொள்வதை சமூகமயமாக்கும் ஒரு முயற்சியாகும்.

கலாநிதி.ட்யூட்டர் வீரசிங்க
பீடாதிபதி
ஸ்ரீபாலி பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

giz

COOPERATION
SRI LANKA
FEDERAL REPUBLIC OF GERMANY

Ministry of National Languages and Social Integration

TP 137-01-2011-18-T
ISBN 978-955-1848-66-8
9 789551 848668
LKR 250/=

WISDOM FOR A BETTER WORLD
THOTHANNA PUBLISHING HOUSE
Uswewa Road, Anamaduwa, Sri Lanka.
Telephone: 032-2263446
E-mail: thothanna@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org